Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, MARCH 4, 2022
வெள்ளிக்கிழமை மார்ச் 04, 2022 | ஒளி: 07 கதிர்: 247 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# பசில் மீது சீறி பாய்ந்தார் விமல்

விமல் வீரவன்சவின் அனல் பறந்த பேச்சின் ஊடாக, நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷவை கடுமையாகத் திட்டித்தீர்த்தார்.

தொடர்ச்சி P2




# சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

## இரண்டு நிறுவனங்களும் அதிரடியாக அறிவிப்பு

சமையல் எரிவாயு தொடர்பில், லிட்ரோ மற்றும் லாஃப் ஆகிய நிறுவனங்களும் அதிரடியான அறிவிப்பொன்றை நேற்று (03) விடுத்திருந்தன.

தொடர்ச்சி P2



# மூவருக்கும் ஆப்பு

# 2/3 க்கு ஆபத்து

அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகிய மூவரும், அமைச்சரவையில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர் என அறியமுடிகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, தலைமையில், ஜனாதிபதி காரியாலயத்தில் நேற்று (03) பகல் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# இன்றும் இருட்டும்

நாடளாவிய ரீதியில் இன்றும் ஏழரை மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது அதற்கான அங்கிகாரத்தை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு வழங்கியுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

# அமைச்சரவையில் சிறு மாற்றம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் தலைமையிலான அமைச்சரவையில் சிறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கைத்தொழில் அமைச்சராக எஸ்.பி. திஸாநாயக்க, வலுசக்தி அமைச்சராக காமினி லொக்குகே, மின்சக்தி அமைச்சராக பவித்ரா வன்னியாரச்சி ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று (03) மாலை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தொடர்ச்சி P2

இலங்கை மீதான மீளாய்வை

# ஐ.எம்.எப் வெளியிட்டது




இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன்களைக் குறைப்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய அணுகுமுறையை உடனடியாக அமல்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்) கோரியுள்ளது. இலங்கை மீதான மீளாய்வு அறிக்கையை வெளியிட்டே, சர்வதேச நாணய நிதியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# விமலுக்கு சாணக்கியன் சாட்டையடி



அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு கைகளை உயர்த்தி, ஜனாதிபதியின் அதிகாரத்தை பலப்படுத்தப் போவதாகக் கூறியவர்கள், அரசாங்கத்தின் செயற்பாடுகளை இன்று விமர்சிக்கின்றனர் எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன், அமைச்சர்

தொடர்ச்சி P2

# கச்சா எண்ணெய் பீப்பாய் 116 டொலர்

உலக சந்தையில் பிரேன்ஞ்ச் ரக கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 116 அமெரிக்க டொலர் வரை அதிகரித்துள்ளது.




தொடர்ச்சி P2

# “எமக்கு எப்படி தீர்வு கிடைக்கும்”

க. அகரன்

இம்முறை இடம்பெறும் ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்விலாவது எமக்கான நீதி கிடைப்பதற்கு வழிப்பிறக்கவேண்டும் என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2







# மறைந்த தில்காந்திக்கு நினைவுத் தங்கப் பதக்கம்

## அவரது தயாரிடம் வழங்கப்பட்டது

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு ஏகாந்த நிலையில் பட்டமும், நினைவுத் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகத் துறையில் சிறப்புக் கலைமாணி பட்டம் பெற்றவர் தில்காந்தி நவரட்ணம். அவர், உயிருடன் இல்லாத நிலையில் அவருக்கான சிறப்புப் பட்டம் அவரது தாயாரிடம் பட்டமளிப்பு விழாவில் வைத்து வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# ஜெய்லானி விவகாரத்துக்கு

## பல அமைப்புகள் கண்டனம்

முஸ்லிம்களின் பழைமை வாய்ந்த வணக்கஸ்தலமான ஜெயிலானி இனந்தெரியாத சக்திகளால் நாசமாக்கப்பட்டதற்கு உலமா சபை, முஸ்லிம் கவுன்ஸில், முஸ்லிம் மீடியா போரம் உள்ளிட்ட பல முஸ்லிம் அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

தொடர்ச்சி P2

உக்ரேனுக்கு எதிரான ரஷ்ய ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் வாக்கெடுப்பில்

# இலங்கை, இந்தியா உட்பட 35 நாடுகள் புறக்கணிப்பு

## 141 நாடுகள் ஆதரவு; 4 நாடுகள் எதிர்ப்பு



உக்ரேனுக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபையில் (ஐ.நா) நேற்றுமுன்தினம் (02) கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் போது,

தொடர்ச்சி P2



# பெரசிட்டமோல் 2 ரூபாய் 30 சதம்

சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில், 500 மில்லி கிராம் பெரசிட்டமோல் (Paracetamol) வில்லை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 2 ரூபாய் 30 சதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# டக்சனின் பூதவுடல் திங்கள் நல்லடக்கம்

## யாழ்., மன்னாரில் அஞ்சலி

எஸ்.றொசேரியன் லெம்பேட்



மாலைதீவில் பெப்ரவரி 26ஆம் திகதி உயிரிழந்த இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் கட்டுநாயக்க

தொடர்ச்சி P2

# இருவரும் பங்கேற்றால் நாங்கள் புறக்கணிப்போம்

## ஆளும் கட்சி பின்வரிசை எம்.பிக்கள் அதிரடி

அரசாங்கத்தில் இருந்துகொண்டே கடுந்தொனியில் விமர்சிக்கும் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகிய இருவருக்கும் எதிராகவும் கடுமையான

தொடர்ச்சி P2

சில சிங்களத் தலைவர்களை விட ஏனையவர்களுக்கு

# தைரியம் இல்லை

எஸ்.நிதர்ஷன்

உண்மை நிலைமையை சிங்கள பௌத்த மக்களுக்கு எடுத்துக்கூறினால் அவர்கள் நிலைமையைப் புரிந்துகொள்வார்கள் எனவும், ஒரு சில சிங்களத் தலைவர்களை விட ஏனையவர்களுக்கு இதனை

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பசில் மீது சீறி பாய்ந்தார் விமல்

நாடு எதிர்நோக்கி இருக்கும் நெருக்கடி நிலைமையில் இருந்து எவ்வாறு மீட்பது என்பது தொடர்பிலான வேலைத்திட்டங்கள் அடங்கிய தேசிய கொள்கை பிரகடனம் நேற்று (02) வெளியிட்டு வைக்கப்பட்டது. இதில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளில் 11 கட்சிகள் ஒன்றாக இணைந்து, பிரகடனத்தை வெளிட்டன.

இதில், முன்னாள் ஜனாபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டார். அத்துடன், அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர். அதுமட்டமன்றி தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அத்தாவுல்லாவும் பங்கேற்றிருந்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மொஹான் இம்பீரியல் ஹோட்டலில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், அமைச்சர் விமல் வீரவன்ச தொடர்ந்து உரையாற்றுகையில்,

வீதிகள் கார்பட் செய்யப்படுகின்றன. கார்பட் செய்யப்பட்ட வீதிகளுக்கு மேலே கார்பட் செய்யப்படுகின்றன. எதற்கெடுத்தாலும் மக்கள் வரிசையில் நிற்கின்றனர். மின்வெட்டு அமுலில் இருக்கிறது. எரிபொருளுக்காக மக்கள் வரிசையில் நிற்கின்றனர். இந்த அரசாங்கத்தில் முகாமைத்துவம் இன்மை என்பது விளங்கிவிட்டது என்றார்.

கையிருப்பில் உள்ள டொலர்களை கொண்டு அத்தியாவசி தேவைகளுக்கான பொருட்களை கொள்வனவு செய்யலாம். ஆனால், பொருளாதார நிர்வாகம் முகாமைத்துவம் செய்யப்படவில்லை. தனக்குத்தான் எல்லாம் தெரியுமென்ற நினைப்பில் மற்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்காமல் தீர்மானங்களை எடுப்பதால், பொருளாதாரம் சரிந்துவிட்டது.

ஆலோசனைகளை பெற்று, அதிகாரிகளின் ஆலோசனைகளின் ஊடாக முன்னகர்த்தவேண்டும். கையில் திட்டங்களை வைத்துக்கொண்டு உலக நாடுகளின் கடன்களைக் கேட்கலாம். திட்டங்கள் எதுவுமே இல்லாமல் பயணிக்க முடியாது.

எங்களிடம் இரட்டை பிரஜைவுரிமை இல்லை. எங்களுக்கு இரு நாடுகள் இல்லை. இங்குதான் இருகின்றோம். இங்குதான் இறப்போம். இந்த மண்ணிலேயே நாங்கள் வாழுவோம் எனத் தெரிவித்த விமல் வீரவன்ச கறுப்பு பணம் நாட்டுக்குள் வருவதை மேம்படுத்தும் நிதியமைச்சர் பற்றி உலகிலேயே நான் கேள்விப்படவில்லை. வங்கிகளின் ஊடாக வரும் டொலர்களை விடவும், உண்டியல்களின் ஊடாக நாட்டுக்குள் வரும் டொலர்கள் அதிகம். இது, பொருளாதாரத்தை சீர்குலைக்கும் அதனை மேம்படுத்தும் நிதியமைச்சர் இருக்கின்றார் என்றார்.

# சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

தமக்கான கடன் பத்திரத்தை வங்கிகள் இன்னுமே வெளியிடவில்லை. இதனால், சமையல் எரிவாயு சிலிண்டர்களை இறக்குமதி செய்து விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அந்நிறுவனங்கள் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளன.

லிட்ரோ நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயு அடங்கிய மூன்று கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளன. எனினும், தறையிக்கப்படாமையால், எரிவாயு விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, விநியோகம் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளதாக லாஃப் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# கச்சா எண்ணெய் பீப்பாய் 116 டொலர்

உக்ரேன் மற்றும் ரஷ்யா இடையில் ஏற்பட்டுள்ள போர் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகம் குறைந்துள்ளமை மற்றும் கேள்வி அதிகரித்துள்ளமை இந்த விலையேற்றத்திற்கு காரணம் என கூறப்பட்டுள்ளது.

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு பின்னர், இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ளமை காரணமாக இலங்கையில் எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோகம் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை செலுத்துமென பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மூவருக்கும் ஆப்பு 2/3 க்கு ஆபத்து

மேற்படி மூவரும் அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டே அரசாங்கத்தை விமர்சனம் செய்கின்றனர். அதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் தனிப்பயணத்தை ஆரம்பிக்க தயாராகின்றனர் என்றும் அதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில்தான், அமைச்சர்களான விமல் வீரவங்க, உதய கம்மன்பில ஆகியோர், ஜனாதிபதிக்கு அரசியல் அமைப்பில் இருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் நீக்கப்பட்டுள்ளனர். அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, அரசாங்கத்தில் இருக்கும் பங்காளி கட்சிகளில் 11 கட்சிகள் இணைந்து "முழுநாடும் சரியான பாதையில்" எனும் தொனிப்பொருளில் கூட்டமொன்றை நடத்தின. அதில் உரையாற்றியோர் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தனர்.

இந்நிலையில், அரசாங்கத்தை விமர்சிக்கும் பங்காளிகளுக்கு எதிராக, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், அவ்வாறானவர்கள் தனிவழி சென்றுவிட்டால், அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு ஆட்டம் கண்டுவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# "எமக்கு எப்படி தீர்வு கிடைக்கும்"

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆர்பாட்டம், நேற்று (03) முன்னெடுக்கப்பட்டது.

ஆர்பாட்டத்தின் பின்னர் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர். அத்துடன் அவர்கள் ஏந்தியிருந்த பதாகைகளில், "கொலையாளியே ஜனாதிபதியாக இருக்கும் போது எமக்கு எப்படி தீர்வு கிடைக்கும்" என எழுதப்பட்டிருந்தது.

அவர்கள் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு பத்துவருடங்கள் கடக்கின்ற நிலையில் எமக்கான நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது.

தொலைத்த எமது பிள்ளைகளை காணாமல் சாட்சிகளான பல தாய்மார்கள் மரணித்துவிட்டனர் .வயது முதிர்ந்த நிலையில் அடுத்த போராட்டத்திற்கு வருவோமா என்ற நம்பிக்கை அற்றநிலையில் இந்தப்போராடங்களை முன்னெடுத்துவருகின்றோம்.

எனவே, சர்வதேச சமூகம் எமக்கான நீதியை விரைவில் வழங்கவேண்டும். இம்முறை இடம்பெற்றுவரும் ஜெனிவா மனித உரிமைபேரவை அமர்விலாவது உறுதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு எமக்கான நீதி நிலை நாட்டப்பட வேண்டும். அதற்கு உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒத்துழைக்கவேண்டுமெனத் தெரிவித்துள்ள அவர்கள், நீதிக் கிடைக்கும் வரையிலும் தங்களுடைய போராட்டம் தொடருமென எச்சரித்துள்ளனர்.

# இலங்கை, இந்தியா உட்பட 35 நாடுகள் புறக்கணிப்பு

ரஷ்யாவின் தாக்குதலைக் கண்டித்து 141 நாடுகள் வாக்களித்தன.

193 உறுப்பு நாடுகள் பங்கேற்றிருந்த இந்த வாக்கெடுப்பில், இலங்கை, இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட 35 நாடுகள் புறக்கணித்தன. இதேவேளை, ரஷ்யா, பெலராஸ், சிரியா, வடகொரியா மற்றும் எதிரியா ஆகிய நாடுகள் அந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன.

உக்ரேன் மீது ரஷ்யா போர்த் தொடுத்ததை அடுத்து ஐ.நாவில், இதுவரையிலும் மூன்று தடவைகள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளன.

உக்ரேன் மீது ரஷ்யாக தனது இராணுவ நடவடிக்கையை, பெப்ரவரி 24 ஆம் திகதியன்று ஆரம்பித்தது. அதனை கண்டித்து, ஐ.நா பாதுகாப்புப் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதில், பாதுகாப்புப் பேரவையின் உறுப்பு நாடுகள் பங்கேற்றன. இதில், இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியன வாக்கெடுப்பைப் புறக்கணித்தன. தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அந்தத் தீர்மானத்தை ரஷ்யா தோற்கடித்தது.

அதேபோல், ஐ.நா., பொதுச் சபை அவசரக் கூட்டத்தைக் கூட்டும் வாக்கெடுப்பும் பாதுகாப்புப் பேரவையில் நடந்தது. அதுவும் தோற்கடிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே நேற்றுமுன்தினம் (2) நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், 141 நாடுகள் ரஷ்ய தாக்குதலைக் கண்டித்து வாக்களித்தன. எந்தவித நிபந்தனையுமின்றி முற்றிலுமாக தாக்குதலை நிறுத்தி உக்ரேனிலிருந்து ரஷ்யா வெளியேற வேண்டும் என்று வாக்களித்த நாடுகள் வலியுறுத்தின.

# இருவரும் பங்கேற்றால் நாங்கள் புறக்கணிப்போம்

நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளும் கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவ்விருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிடின், கடுமையான முடிவுகளை தாங்கள் எடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுமென, அவர்கள் எச்சரித்துள்ளனர்.

அரசாங்கத்தில் பங்காளியாக இருந்துகொண்டே அரசாங்கத்தையும் அதன் செயற்பாடுகளையும், அமைச்சர்களையும் பகிரங்கமாக விமர்சிக்கும் இவ்விருவரின் செயற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

நாடு, முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் நெருக்கடிக்கு மத்தியில், அந்த நெருக்கடியை மென்மேலும் உக்கிரமடைய செய்யும் இவ்விரு அமைச்சர்களின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆகையால், அவ்விருவருக்கு எதிராகவும் அதிரடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் தார்மீக பொறுப்பாகுமென ஆளும் கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக்குள்ளும், ஆளும் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டங்களிலும் பேசவேண்டிய விடயங்களை ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி, அரசாங்கத்துக்கு எதிரான கருத்துகளை முன்வைக்கின்றனர்ட என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விருவருக்கு எதிராக கடுமையாக நடவடிக்கைகளை எடுக்க தவறும் பட்சத்தில், எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் ஆளும் கட்சி பாராளுமன்ற குழுக்கூட்டத்தை புறக்கணிப்போம் என்றும் தெரிவித்துள்ள அவர், உள்ளே இருந்துகொண்டே விமர்சனம் செய்யமுடியாது என்றார்.

# தைரியம் இல்லை

செய்வதற்கு தைரியம் இல்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாட்டில் ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக பேரினவாதத்தை ஆதரிக்கும் கொள்கைகளை முன்னிறுத்தி வந்துள்ளதாக தெரிவித்துள்ள இரா.சம்பந்தன், இந்த நிலை இலங்கைக்கு பாரிய பாதகங்களை கொண்டுவந்துள்ளதுடன் ஒருமித்த இலங்கை நாட்டின் மக்களை பாதித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, குறித்த அறிக்கைக்கான இலங்கை அரசாங்கத்தின் பதில் அறிக்கையும் வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள வரலாறு காணாத பிரச்சினைக்கும் மீண்டெழுந்து வர முடியாத நிலைமைக்கும் இதுவே பிரதான காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமையினால் பாதிக்கப்பட்டுள்ள ஆயுதமேந்தாத தமிழ் மக்கள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த வேண்டுகிறார்களே தவிர பழிவாங்கலை நாடவில்லை எனவும் அந்த ஊடக அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். .

மாறாக அவர்கள் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மீள் நிகழாமை போன்றவற்றை உறுதி செய்யுமாறே வேண்டுகின்றார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மறைந்த தில்காந்திக்கு நினைவுத் தங்கப் பதக்கம்

யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறையில் சிறப்புத் தேர்சிக்காக வழங்கப்படும் மறைந்த மாணவன் சகாதேவன் நிலக்ஷன் ஞாபகார்த்த தங்கப்பதக்கமும் குறித்த மாணவிக்கே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

# அமைச்சரவையில் சிறு மாற்றம்

இதேவேளை போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, போக்குவரத்து அமைச்சராக நியமிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அறியமுடிகின்றது.

வலுசக்தி அமைச்சராக உதய கம்மன்பில கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது, அதுமட்டுமன்றி கைத்தொழில் அமைச்சராக விமல் வீரவன்ச பதவியில் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.எம்.எப் வெளியிட்டது

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) நிறைவேற்று சபை இலங்கையுடனான அதன் IV ஆம் பிரிவு ஆலோசனையை நிறைவு செய்துள்ளது. அதுதொடர்பில், நேற்று (03) அறிவித்துள்ளது.

மீளாய்வு அறிக்கை, பெப்ரவரி 25ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது. அதன் பின்னரான நடவடிக்கைகள் தொடர்பில், சர்வதேச நாணய நிதியம் அறிக்கை வெளியிட்டுள்ளதுடன் அதுதொடர்பில் தெளிவுப்படுத்தியுள்ளது.

# விமலுக்கு சாணக்கியன் சாட்டையடி

விமல் வீரவங்ச போன்றவர்கள் போலிய தேசப்பற்றாளர்களின் வேடத்தை மீண்டும் இட்டுள்ளனர் என்றார்.

நிதியமைச்சர், மத்திய வங்கியின் ஆளுநர் தத்தமது கடமைகளை முறையாக முன்னெடுக்கவில்லையெனில், அப்பதவியிலிருந்து நீக்குமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவும். அதனைவிடுத்து, எதிர்க்கட்சியின் அரசியலை செய்வதற்கு முற்பட வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இல்லா தொழிக்குமாறு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் கையெழுத்து வேட்டை, வாழைச்சேனையில் நேற்று (03) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு எவ்வாறு மீள்வது என்பது தொடர்பில், பங்காளிகளில் 30 பேர் இணைந்த ஒரு குழு, கூட்டமொன்றை நடத்தியது. அதில், நிதியமைச்சரின் செயற்பாடுகளை அமைச்சர் விமல் வீரவங்ச கடுமையாக விமர்ச்சித்துள்ளார். இவ்வாறானவர்கள் கடந்த ஒன்றரை வருடங்களாக என்ன செய்தார்கள். தற்போது மீண்டும் போலி யாக தேசப்பற்றாளர் வேடமிட்டுள்ளனர்.

அவர்களின் செயற்பாடுகளுக்கு வடக்கு, கிழக்கு மக்கள் ஒருபோதும் ஏமாறமாட்டார்கள். எனினும், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் சரியான தீர்மானத்தை எடுக்கவேண்டும். ஏனெனில், நாட்டை துண்டு, துண்டுகளாக வெட்டி சீனாவுக்கு விற்றபோது தேசப்பற்றாளர்கள் தூங்கிவிட்டனர். துறைமுக நகரம் நிர்மாணிக்கப்பட்வேளையில் அவர்கள் எங்கே? சென்றனர் என்றும் வினவினார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில், கடந்த ஒன்றரை வருடங்களாக நாங்கள் கூறிவருவதை, விமல் வீரவங்ச 20 நிமிடங்களில் கூறியுள்ளார். இது போலியான தேசப்பற்றாளர் வேடமாகும். அதில்தான், மக்கள் கவனமாக இருக்கவேண்டும். போலி தேசப்பற்றார்களைக் கண்டு ஏமாந்துவிடவேண்டாம் என்றார்.

நாடு, இந்தளவுக்கு பொருளாதார ரீதியில் பின்னடைவை சந்தித்தமைக்கு, முன்னாள் ஜனாதிபதி, விமல் வீரவன்ச உள்ளிட்ட, நேற்றையக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த 30 பேரும் பொறுப்பு கூறவேண்டும் என்று தெரிவித்த சாணக்கியன், இவ்வாறானவர்கள்தான், எம்.எம்.சி ஒப்பந்தம் தொடர்பிலும் நாட்டுக்கு பொய் கூறினர்.

# ஜெய்லானி விவகாரத்துக்கு பல அமைப்புகள் கண்டனம்

26 அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே வன்மையாகக் கண்டனம் தெரிவித்க்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்துமாறும் அந்த கூட்டறிக்கையின் ஊடாக கோரப்பட்டுள்ளது.

தொல்பொருள் முக்கியமான இடங்களை அழிப்பதை தடுக்குமாறும் கோரியுள்ளன.

வரலாற்றுப் புகழ்மிக்க இடங்கள், வழிபாட்டுத்தலங்கள் அழிக்கப்படுவதை வன்மையாக கண்டிப்பதாகவும் தப்தர் ஜெய்லானியை அழிக்க முயன்றவர்களை கண்டறிந்து கைது செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூட்டறிக்கையில் கோரப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த ஜெய்லானி குறித்து பல ஆய்வாளர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். அத்தகைய இடம் அழிக்கப்பட்டுள்ளதை அனுமதிக்க முடியாது எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரசிட்டமோல் 2 ரூபாய் 30 சதம்

இது, கடந்த பெப்ரவரி 28 முதல் அமுலுக்கு வந்துள்ளது. என்றும் அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் பல பாகங்களிலும் சில மருந்துகளுக்கும் குளிசைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என, சுகாதார தொழிற்சங்கங்களும் எதிர்க்கட்சியினரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டக்சனின் பூதவுடல் திங்கள் நல்லடக்கம்


சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கையை நேற்று (03) அதிகாலை வந்தடைந்தது.

இந்த நிலையில் குறித்த பூதவுடல் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பூதவுடல், அஞ்சலிக்காக யாழிற்கு எடுத்துச் செல்லப்படும், அத்துடன் மன்னார் பனங்கட்டுக் கொட்டிலில் உள்ள அன்னாரது இல்லத்துக்கு அஞ்சலிக்காக எதிர்வரும் 5ஆம் திகதியன்று எடுத்துவரப்படும்.

எதிர்வரும் திங்கட்கிழமை (7) மாலை மன்னார் பொது மயானத்தில் சடலம் நல்லடக்கம் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.








## பட்டமளிப்பு விழா....

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி நேற்று (03) பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள் எம்.றொசாந்த்)

போலி முகவர் நிலையம் சுற்றிவளைப்பு

# போலியான ஆவணங்கள் சிக்கின

மருதானையில் அனுமதிப் பத்திரமின்றி இயங்கி வந்த போலி வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையத்தை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவினர் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது, போலியான வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த நிலையத்தில் 16 வயது சிறுமியொருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த நிலையில், மருதானை பொலிஸ் நிலையத்தின் பெண்கள், சிறுவர் பிரிவின் அதிகாரிகள் அங்கு வரவழைக்கப்பட்டு பொலிஸாரால் சிறுமி அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்த சுற்றிவளைப்பின்போது அங்கிருந்த 50 கடவுச்சீட்டுகள், போலியான முறையில் தயாரிக்கப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்கள் உள்ளிட்ட போலி ஆவணங்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபர் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு 2 இலட்ச ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். வழக்கு இம்மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், அந்த போலி முகவர் நிலையத்தின் பிரதான சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



# "உணவு நெருக்கடி ஏற்படலாம்"

### அமரவீர எச்சரிக்கை: ஒவ்வோர் அங்குலமும் முக்கியம் என்கிறார்

உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு நாட்டிலுள்ள ஒவ்வோர் அங்குலத்திலும் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதே தீர்வு என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் எதிர்காலத்தில் உணவு நெருக்கடியொன்று ஏற்படலாம் எனவும் எச்சரித்துள்ள அவர், விளைச்சல் குறைவடைந்தமை, இயற்கை உர விவசாயத்தில் விவசாயிகள் நம்பிக்கையை இழந்துள்ளமை, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகள் பல, ரஷ்யா - உக்ரேன் யுத்தத்தால் உணவுப் பொருள் ஏற்றுமதியில் கட்டுப்பாடுகளை விதித்துள்ளமை உள்ளிட்டவை இதற்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

ஒருவரை ஒருவர் மாறிமாறிக் குறை கூறிக்கொண்டிருக்காது, நாட்டிலுள்ள ஒவ்வோர் அங்குலத்திலும் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து பயிரிடுதலை மேற்கொள்ள வேண்டும் என்றார்.




# 'இதயமுள்ள இராணுவம்' யாழில் சமூகப் பணிகள்

யாழ்ப்பாணம், சாவகச்சேரியை தளமாகக் கொண்ட 4ஆவது விஜயபாகு காலாட் படையணியின் படையினரால் 'இதயமுள்ள இராணுவம்' திட்டத்தின் கீழ், கடந்த மாதம் பல்வேறு சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி கடந்த மாதம் 26ஆம் திகதி படையணியின் வளாகத்துக்கு அழைக்கப்பட்டிருந்த சாவகச்சேரியைச் சேர்ந்த 20 கர்ப்பிணி தாய்மாருக்கு குழந்தைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள், மரக்கறி வகைகள், நிவாரண பொருட்கள் அடங்கிய ஏழாயிரம் ரூபாய் பெறுமதியான பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதேவேளை, மட்டுவில் பாடசாலையில் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர் ஒருவருக்கு ஜப்பானில் வசிக்கும் ருவன் ரத்நாயக்க என்பவரால் வழங்கப்பட்ட நிதி உதவியை கொண்டு 50,000 ரூபாய் பெறுமதியான புலமைப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.



## சந்திப்பு...

இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜூலி சுங்கிற்கும், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று (03) சந்திப்பொன்று இடம்பெற்றது.

# "ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் தோல்வி"



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்த விசாரணைகள் படுதோல்வி அடைந்துள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் ஆளுநர் அசாத் சாலியின் வழக்கு விசாரணையை பார்க்கும்போது, அந்த வழக்கு விசாரணை கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதியே நிறைவடைந்துள்ளது.

ஆனால், அசாத் சாலிக்கு எதிரான குற்றப்பத்திரிகை கடந்த வருடம் ஜூலை மாதமே தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

விசாரணை நிறைவடைவதற்கு முன்னர் எந்த நாட்டிலாவது சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்வாரா? சட்டமா அதிபரும் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த பெரும்பாலானோரும் அரசியல் வாதிகளுக்காக செயற்படுவது தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மத்திய கலாசார நிதியச் சட்டத்தின்

# வரைவு விதிகள் பிரதமரிடம் கையளிப்பு



1980ஆம் ஆண்டு 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ள வரைவு விதிகள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய, அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவால், மத்திய கலாசார நிதியச் சட்டம் தொடர்பான குழு நியமிக்கப்பட்டிருந்தது.

கடந்த அரசாங்கத்தின் போது இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் பாரியளவில் நிதி துஷ்பிரயோகம் இடம்பெற்றமை போன்ற நிதி மோசடிகள் மேலும் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு, இந்த விதிகளை அறிமுகப்படுத்துவது மிகவும் அவசியமென பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# 13 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் நியமனம்

பதின்மூன்று புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று (03) கையளிக்கப்பட்டது.

இதில், .ஏ.ஜி. அலுத்கே, ஆர்.ஆர்.ஜே.யு.டி.கே. ராஜகருணா,. டி.எம்.சீ.எஸ். குணசேகர, எம். பிரபாத் ரணசிங்க, ஆர். வெலிவத்த, நிஷாந்த பீரிஸ், எஸ்.எம்.ஏ.எஸ். மஞ்சநாயக்க, எல். சமத் மதநாயக்க, ஆர்.எம்.எஸ்.பி. சந்திரசிறி ஆகியோர் மாவட்ட நீதிபதிகாக பதவிவகித்தனர்.

இதேவேளை, ஜி.எல். பிரியந்த,ஆர்.ஏ.டி.யு.என். ரணதுங்க ஆகியோர் மாவட்ட நீதிபதிகளாகவும் பதவிவகித்தனர்.

இந்நிலையில், வி.எம். வீரசூரிய, எச்.ஏ.டி.என். ஹேவாவசம் ஆகிய இருவரும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி சட்டத்தரணிகளாக பதவிவகித்தனர்.

கூட்டணியால் மாத்திரமே

# இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்

■ கனகராசா சரவணன்



தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினையை தீர்க்கக் கூடிய தகுதி உள்ள ஒரேயொரு கட்சி தமிழர் விடுதலை கூட்டணி. அந்த கட்சியால் மாத்திரம்தான் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்க முடியுமென கூட்டணி கட்சி செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள விடுதி ஒன்றில் நேற்று (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ் மக்கள், நாளுக்கு நாள் வேவ்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி செல்லுகின்றனரே தவிர, உண்மையில் நாட்டில் எந்தப் பிரச்சினை இருந்து, அதற்கு என்ன தீர்வு காண ஆரம்பித்தோமே அதை எல்லாம் படிப்படியாக மறந்துவிடுகின்றனர்.

இப்போது, புதுப்புது பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் இனப்பிரச்சினை தெரிவிக்கும் போது, எங்களுடைய அத்தனை பிரச்சினைகளை உள்ளடக்கியதாக இருந்தது. ஆனால், இன்று ஒவ்வொரு கட்சி ஆரம்பித்து வருகின்றது. இதனால் உண்மையான தமிழ் மக்களின் பிரச்சினை வலுவிழந்து போகின்றது. இதனை எவரும் உணர்வதாக இல்லை எனவும் கூறினார்.

# கொழும்பில் 14 மணிநேர நீர்வெட்டு

கொழும்பின் சில பகுதிகளுக்கு நாளை (05) 14 மணி நேர நீர்வெட்டு அமல்ப்படுத்தப்பட உள்ளதாக நீர்வழங்கல், வடிகாலமைப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

இதன்படி சனிக்கிழமை இரவு 8 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை 10 மணி வரையில் இந்த நீர்வெட்டு அமல்படுத்தப்பட உள்ளது. கொழும்பு 7, 8, 10, 12, 14, 15 ஆகிய பிரதேசங்களிலேயே இவ்வாறு நீர்வெட்டு அமல்படுத்தப்பட உள்ளதாக நீர்வழங்கல், வடிகாலமைப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

கொழும்பு 02, 03, 11 ஆகிய பிரதேசங்களில் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் சந்தேகநபர் பலி

■ இந்திக அருண குமார

நாவுல்ல பிரதேசத்தில் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிச்செல்ல முயன்ற 37 வயதான சந்தேகநபர் மீது, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அவர், உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 13 பக்கெட்டுகளில் ஹெரோய்ன் போதைப்பொருளை மீட்ட பொலிஸார், அவரை கைது செய்தனர். எனினும், பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பியோட அவர் முயன்றுள்ளார்.

இதன்போது, தற்பாதுகாப்புக்காக பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். அதில் காயமடைந்த சந்தேகநபர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன்





பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த உயிரிழந்தவரின் சகோதரரான டபிள்யூ.ஏ.சந்தன ஜயரத்ன, "நாய்க்கு மருந்து வாங்குவதற்காக அண்ணனுடன் சென்றேன். இதன்போது பொலிஸார் வாகனத்தை நிறுத்தி சோதனையிட்டனர். மருந்து வாங்க செல்வதற்கு தாமதமாகும் என்பதால் சோதனையிட வேண்டாம் என அண்ணன் கூறினார். இதனால் அண்ணனுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதன்போது பையிலிருந்து துப்பாக்கியை எடுத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் முதலில் தரையில் துப்பாக்கியால் சுட்டார். பின்னர் அண்ணனின் நெஞ்சில் சுட்டுவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர்" எனவும் தெரிவித்தார்.

திராய்க்கேணி தமிழ்க் கிராமத்தின் பாரம்பரிய கேணி

# பறிபோகும் அபாயம்

## பொதுநலஅமைப்புகள் போர்க்கொடி

■ சகா

திராய்க்கேணி தமிழ்க் கிராமத்தின் பாரம்பரிய சலவைத் தொழிலுக்கான நீர் நிறைந்த கேணியை எவ்வித அனுமதியும் இல்லாமல், அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் அத்துமீறி மூடிவருவதாக பொதுநலஅமைப்புகள் பரவலாக முறையிட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவினுள் வருகின்ற ஒரேயொரு தமிழ்க் கிராமம் திராய்க்கேணிக் கிராமமாகும்.

இக்கிராம மக்கள் பலர் பரம்பரை பரம்பரையாக இக்கேணியில் தமது சலவைத்தொழிலைச் செய்துவருகின்ற இந்நிலையில், அப்பகுதி தவிசாளர் இவ்விதம் அராஜமாகச் செயற்படுவதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்நடவடிக்கைக்கு, திராய்க்கேணி பொதுநலஅமைப்புகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

திராய்க்கேணி பெரியதம்பிரான் கோவில் பரிபாலன சபையினர், இவ் அத்துமீறி மண்நிரப்பும் செயற்பாடு குறித்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தொடக்கம் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் வரை எழுத்துமூலம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.





குறித்த சபைத் தலைவர் சி.கார்த்திகேசு மற்றும் செயலாளர் கி.புவனேஸ்வரன் இணைந்து முறையிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 'திராய்க்கேணி, பாலமுனை 06ஆம் பிரிவுக்குட்பட்ட ஸ்ரீ பெரியதம்பிரான் கோவில் பரிபாலன சபையினரின் கீழ் இக்குளம் பராமரிக்கப்படுகிறது.

இந்நிலையில், கோவில் நிர்வாக சபையினரிடமோ அல்லது சலவைத் தொழிலாளிகளிடமோ எவ்வித அனுமதியுமின்றி எமது நிலத்திலுள்ள குளத்தை அட்டாளைச்சேனை தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா கனரக வாகனங்களின் உதவியுடன் மண்போட்டு மூடி வருகின்றார்.

அவரது இவ் அராஜகச் செயலை உடனடியாக தடுத்துநிறுத்தி, எமது பாரம்பரிய சலவைத் தொழிலை தொடர்ந்து செய்வதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் வடக்கில்

# கன மழைக்கு வாய்ப்பு

■ எம்.றொசாந்த்

வடக்கில் எதிர்வரும் நாள்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளதால், மீனவர்கள் கடலுக்கு செல்வதில் அவதானமாக இருக்குமாறும், வெங்காயம் மற்றும் சிறு தானிய செய்கையாளர்கள் விதைத்தல் மற்றும் அறுவடை செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்வது சிறந்தது என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கே உருவான காற்றழுத்த தாழ்வு நிலை, தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாற்றமடைந்துள்ளது. இது மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"இதனால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (08) வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமான மற்றும் கன மழை கிடைக்க வாய்ப்புள்ளது.

"ஞாயிற்றுக்கிழமை (06) வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக கன மழை கிடைக்க வாய்ப்புள்ளது.

"தற்போதைய நிலைமைகளின் படி, இதன் மிகச் சரியான நகர்வுப் பாதையை கணிக்க முடியாதுள்ளது. எனினும், சில மாதிரிகள் இந்த தாழமுக்கம் வடக்கு மாகாணத்தின் கரையோரத்தை அண்மித்தே நகரும் எனக் காட்டுகின்றன.

"அவ்வாறாயின் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் வேகமான காற்று மற்றும் இடி மின்னலுடன் கூடிய கன மழையைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

"குறிப்பாக, வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளை விட, யாழ்ப்பாண மாவட்டம் சற்று கூடுதலான அளவு மழையைப் பெற வாய்ப்புள்ளது" என்றார்.



மணல் அகழ்வு இடங்களை

## அவதானித்த விசேட குழு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மணல் அகழ்வு செய்யப்படும் இடங்களுக்கு, திணைக்கள தலைவர்கள், அரச அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளடக்கிய விசேட குழுவினர், நேற்று முன்தினம் (02) நேரடியாக கள விஜயம் மேற்கொண்டனர்.

பொது அமைப்புகளின் ஒன்றியம், மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக, இந்தக் கள விஜயம் இடம்பெற்றுள்ளது.

மணல் அகழ்வுடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர், ஏனைய சிவில் அமைப்புகள், புவிச்சரிதவியல் திணைக்களம், பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, மணல் அகழ்வு இடம்பெற்று வரும் இடங்களைப் பார்வையிட்டு, தொடர்ச்சியாக மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்துக்கு அமைவாகவே மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மணல் அகழ்வு செய்யப்படும் இடங்களில் நேரடியாக கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். ஒருங்கிணைப்புக் குழுவின்

## பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம்

■ என்.ராஜ்



யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் புதிய பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக யாழ். மாவட்ட சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் செயற்பட்டு வந்தார்.

இந்நிலையில் அவருக்கு எதிராக பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பல பிரதமர் அலுவலகத்துக்கு கிடைக்கப் பெற்றதையடுத்து, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக கீதநாத் காசிலிங்கம் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக எதிர்வரும் நாள்களில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள் அனைத்தும், பிரதமரின் கட்டுப்பாட்டில் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'படைப்பாக்க ஆளுமைகள்'

## நூல் வெளியீடு

■ அ.அச்சுதன்



நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில், பல்துறைப் படைப்பாளி பா.மோகனதாஸ் எழுதிய 'படைப்பாக்க ஆளுமைகள் (நேர்காணல்கள்)' எனும் நூல், திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் நாளை (05) வெளியிடப்படவுள்ளது.

கவிஞர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையிலான இந்நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி முதன்மை அதிதியாகவும் பட்டணமும் சூழலும் பிரதேச சபை உபதவிசாளர் முஹமட் நௌபர் சிறப்பு அதிதியாகவும் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வீ.கோணேஸ்வரன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நூல், ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிக ஆளுமையாளர்களின் (73) அனுபவங்களைப் பேசும் முதல் நேர்காணல் நூலாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் தொடர் மழை

### குளங்களின் நீர்மட்டமும் உயர்வு



■ வ.சக்தி, ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பில் கடந்த மூன்று நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக தாழ் நிலப்பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்பதால் மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வாகரை, புதிய காத்தான்குடி, ஆரையம்பதி, நாவற்குடா, கொக்கொடிச்சோலை உட்பட பல இடங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. மாவட்டத்தின் பல வீதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாவட்டத்திலுள்ள பிரதான குளங்களின் நீர் மட்டங்களும் உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில், நேற்று (03) காலை 6 மணி வரையில் உன்னிச்சைக்குளத்தின் நீர் மட்டம் 33 அடியாகவும், உறுகாமம் குளத்தின் நீர் மட்டம் 15 அடி 6 அங்குலமாகவும், வாகனேரிக் குளத்தின் நீர் மட்டம் 19 அடி 1 அங்குலமாகவும், உயர்ந்துள்ளன.

அத்தோடு, நேற்றுக் காலை 8.30 மணி மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பில் 42.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு நிலையப் பொறுப்பதிகாரி சுப்பிரமணியம் ரமேஸ் தெரிவித்தார்.

# முள்ளிவாய்க்காலில் கைக்குண்டுகள் மீட்பு

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் கிழக்கு சனசமூக மண்டபத்துக்கு அருகாமையில் நேற்று முன்தினம் (02) காணியை சுத்தம் செய்து கொண்டிருந்த பொதுமகன் ஒருவர் இதைக் கண்டு, முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

குறித்த பகுதிக்குச் சென்ற முல்லைத்தீவு பொலிஸார், அங்கு ஆய்வு பணியை மேற்கொண்டபோது, 176 கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த பகுதிக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றின் உத்தரவு பெறும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள்.



இயற்கை உரம் எனும் போர்வையில்

# தேக்கு மர குற்றிகள் கடத்தல்

## இருவர் கைது

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியில் 10ஆம் கட்டையில் சட்டவிரோதமான முறையில் தேக்கு மரங்களை வெட்டி, கடத்திய இருவர், நேற்று முன்தினம் (02) கைதுசெய்யப்பட்டனர்.

தேங்கங் காட்டுப் பகுதிக்குள், லொறியொன்று நுழைந்துள்ளமை தொடர்பில் மாங்குளம் வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, சிறப்பு அதிரடிப்படையினரின் உதவியுடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

29 தேக்கு மரக்குற்றிகள் அறுக்கப்பட்டு, லொறியில் ஏற்றப்பட்டு, அதற்கு மேல் இயற்கை உரம் இடப்பட்டு, மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து கொண்டுசெல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட இருவரும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் ஒட்டுசுட்டானில் இருந்து இயற்கை உரம் ஏற்றிக்கொண்டு, யாழ்ப்பாணம் செல்லமுற்பட்டுள்ளதாகவும் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தேக்க மரக் குற்றிகள் ஏற்றிய லொறி, மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இதயங்களை ஒன்றிணைக்கும்

## கிராமிய பால புனரமைப்பு



■ எம்.எஸ்.எம் நூர்தீன், ஜவ்பர்கான்

பெரிய கல்லாற்றில் புனரமைக்கப்படவுள்ள பாலத்துக்கான அபிவிருத்தி பணிகள், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் நேற்று முன்தினம் (02) அடிக்கல் நாட்டப்பட்டது.

அரசாங்கத்தின் சுபீட்ஷத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைவாக, இதயங்களை ஒன்றிணைக்கும் கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், இப்பாலம் அமைக்கப்படுகின்றது.

தொடர் மின்தடைக்கு எதிராக

## மெழுகுவர்த்தி, டோர்ச் லைட் ஏந்தி எதிர்ப்பு நடவடிக்கை

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்



நாட்டில் தொடர்ச்சியாக அமல்படுத்தப்பட்டு வரும் தொடர் மின்தடைக்கு எதிராக மெழுகுவர்த்தி மற்றும் டோர்ச் லைட் ஏந்தி, எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி A9 வீதி சந்தி, மட்டக்களப்பு, கோட்டைக்கல்லாறு, பெரிய கல்லாறுக்கு இடைப்பட்ட பாலத்தில் நேற்றிரவு (03) 8.30 மணிக்கு இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் தங்களது முகப்புத்தகத்தில், தற்பொழுது நாட்டில் பரவலாக பல மணி நேர மின்சாரத் தடை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் மக்கள் அன்றாடம் பல பாதிப்புக்களுக்கு உள்ளாவதாக பதிவிட்டுள்ளனர்.

இராணுவத்தினரால்

## ஒரு தொகுதி மாத்திரைகள் மீட்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மாத்திரைகளை, நேற்று (03) அதிகாலை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், நடுக்குடா இராணுவத்தினரின் உதவியுடன் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அவற்றில் ஒரு தொகுதி மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்த மாத்திரைகள், உடல் வலியை குறைப்பதற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகள் எனத் தெரிய வந்துள்ளதோடு, இரு பெட்டிகளில் இருந்து 60 ஆயிரம் மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

### அபராதம் செலுத்தாதவர்களுக்கு
## புதிய தண்டனை

■ எம். செல்வராஜா

பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு, தண்டப்பணம் செலுத்த முடியாதவர்கள், ஹப்புத்தளையின் பிரதான சுற்றுலாத்தளமான எடிசன் பகுதியை சுத்தம் செய்தனர்.

வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோருடன் இணைந்தே இவர்கள் இந்த நடவடிக்கையை நேற்று (3) முன்னெடுத்திருந்தனர்.

### ஹட்டனில் பரீட்சை முடிந்ததும்
## விசேட பாதுகாப்பு முன்னெடுக்கப்படும்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

நாடளாவிய ரீதியில் நடைபெறும் 2021ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை, 5ஆம் திகதியுடன் நிறைவடைவதால், அன்றைய தினம் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குள் விசேட பாதுகாப்பு திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித்த அல்விஸ் தெரிவித்துள்ளார்.

அந்த திட்டங்கள், சகல பரீட்சை மத்திய நிலையங்களை அண்மித்த பகுதிகள் மற்றும் நகரங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், பரீட்சை நிறைவடைந்ததும் அனைத்து மாணவர்களையும் விரைவாக தத்தமது வீடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும் என்றார்.

### சுகாதாரத்துறையினரின் பணிப்பகிஷ்கரிப்பால்
## 2ஆவது நாளாகவும் நோயாளர்கள் அவதி



■ டி.சந்ரு

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார தொழிற்சங்கங்கள், நேற்று (03) இரண்டாவது நாளாகவும் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன. இதனால், நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தாதியர்கள், ஆய்வு கூட நிபுணர்கள், மருந்தாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் நாளாந்த சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

### டீசல் பிரச்சினையால்
## சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களும் பாதிப்பு



■ மஹேஸ் கீர்த்திரத்ன

எரிபொருள் பிரச்சினையால் மாத்தளை மாவட்ட சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது, பறிக்கப்படும் கொழுந்துகளை தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ஏற்றிச் செல்வதற்கான லொறிகளுக்குத் தேவையான டீசல் கிடைக்காமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மாத்தளை மாவட்டத்தின் இரத்தோட்டை, யட்டவத்த, அம்பகங்கோரல, உக்குவளை உள்ளிட்ட பிரதேசங்களிலுள்ள சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



### ருவன்புர கற்குவாரியின் அனுமதிப்பத்திரத்தை
# இரத்துச் செய்
### பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன்- ருவன்புர வீடமைப்புத் திட்டப் பகுதியில் உரிய தரமின்றி நடத்திச் செல்லப்படும் கற்குவாரிக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யக்கோரி, பிரதேசவாசிகளால் கற்குவாரிக்கு முன்பாக நேற்று (3) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன்- ருவன்புர கற்குவாரியை அண்மித்த பகுதிகளில் சுமார் 200 குடும்பங்கள் வசிப்பதுடன், இவர்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகவும் கொண்டுள்ளனர்.

குறித்த கற்குவாரியில் கற்களை உடைப்பதற்காக பயன்படுத்தப்படும் வெடிகளால் அதனை அண்மித்த வீடுகள் சேதமடைவதுடன், குடிநீர் மற்றும் விவசாய நிலங்களுக்கு பெற்றுக்கொள்ளும் நீரும் மாசடைவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.



மேலும், ருவன்புர வீடமைப்புத் திட்டம், விக்டன் தோட்டம் ஆகியவற்றுக்குச் செல்லும் காபட் இடப்பட்டுள்ள வீதியில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. கற்களை ஏற்றிக்கொண்டு பாரிய டிப்பர் வாகனங்கள் பயணிப்பதால் வீதி மேலும் சேதமடைவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், ஹட்டன் உதவி பொலிஸ் அதிகாரி பாருக், ஹட்டன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன, ருவன்புர வீடமைப்பு திட்டத்தின் கிராம உத்தியோகத்தர் ஆகியோர், ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகைத் தந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மற்றும் கற்குவாரியின் உரிமையாளரோடு பேச்சுவார்த்தை நடத்தினர். எனினும், இதன்போது இரு தரப்பும் இணக்கப்பாட்டுக்கு வராததால், இந்த விடயம் தொடர்பில் கினிகத்தேன பிரதேச செயலாளருடன் கலந்துரையாடலை முன்னெடுக்க இந்த மாதம் 7ஆம் திகதி ஏற்பாடு செய்வதாக உறுதியளித்துள்ளனர். இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.




### எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு எதிராக
## மலையகத்தில் ஆர்ப்பாட்டம்

■ சுஜிதா, ரஞ்சித் ராஜபக்ஷ, எஸ்.கணேசன்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து லிந்துலை, ஹட்டன், கினிகத்தேனை நகரங்களில் கடந்த இரண்டு நாள்களாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மக்கள் விடுதலை முன்னணியால் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன





## கண்டியில் பகலிலும் ஒளிரும் வீதி விளக்கு

■ சேஹ்ன் செனவிரத்ன

நாட்டில் ஏற்பட்டிருக்கும் மின்சார நெருக்கடியால் தினமும் நாடு முழுவதும் ஏழரை மணித்தியாலத்துக்கு அதிகமான நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது.

எனினும், கண்டி, டீ.எஸ். சேனநாயக்க வீதியில் பகல் வேலைகளிலும் வீதி விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

இது தொடர்பில் கண்டி நகர ஆணையாளர் இசான் விஜேதிலகவிடம் வினவிய போது, அந்த வீதியின் மின் விளக்குகளை நிர்வகிப்பது மின்சார சபையினர் எனவும் இந்த விடயம் தொடர்பில் மின்சார சபையினரைத் தெளிவுப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

### இ.தே.தோ.தொ சங்கத்தின்
## 64ஆவது வருட பூர்த்தி விழா நாளை

■ எம். செல்வராஜா

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 64 ஆவது வருட பூர்த்தி மற்றும் சர்வதேச மகளிர் தினம் என்பவற்றை முன்னிட்டு, இரண்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகள் பதுளை சேனநாயக்க அரங்கில் நாளை (5) நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளின் பிரதம விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்துகொள்ளவுள்ளார். இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்ட பிரபல தொழிற்சங்க பிரமுகர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகள் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### மலையக மக்களின் உரிமை
## மீட்டெடுக்கப்பட்டுள்ளது
### வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

மலையக மக்களின் உரிமை மீட்டெடுக்கப்பட்டுள்ளது என, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் (02) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பில் அரசாங்கத்தால் கடந்த மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக தொடர்ந்தும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பாராளுமன்றத்திலும் ஊடகங்களிலும் மக்கள் முன்னிலையிலும் இவ்விடயம் தொடர்பான தெளிவூட்டல்களில் ஈடுபட்டிருந்தேன் .



அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தியால் இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன் பயனாக சட்டமா அதிபர், 13 நிதி நிறுவனங்களை நீக்கியுள்ளதாக உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்கு சட்டமா அதிபர் கொண்டுவந்துள்ளார். இது, பெருந்தோட்ட மலையக சமுதாயத்துக்கு கிடைக்கப்பெற்ற பாரியதொரு வெற்றியாகும் என்றார்.



## பட்டாவத்த பாடசாலை கட்டடம் புனரமைப்பு

சேதமடைந்திருந்த பட்டாவத்த தோட்டப் பாடசாலை கட்டடமானது, புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

சேதமடைந்திருந்த கட்டடத்தை புனரமைத்து தருமாறு, இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமானிடம் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே, இக்கட்டடம் புனரமைப்பு செய்து, செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ், இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பலத்துக்கு வந்த உள்விவகாரம்: அடுத்த கட்டம் என்னவாகும்?

அரசாங்கத்துக்கு உள்ளிருந்தே எதிர்ப்புகள் கிளம்பும் போதெல்லாம், “வாள் இருக்கிறது; எப்போது வேண்டுமானாலும் கையிலெடுப்பேன்”. “பைல்கள் இருக்கின்றன; திறந்து பார்ப்பதற்குத் தயார்” என்றெல்லாம் முன்னாள் ஜனாதிபதிகள் கூறியதை கேள்விப்பட்டிருக்கின்றோம்.

ஓர் அரசாங்கத்தின் பலம், பாராளுமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டும். தனியொரு கட்சி ஆட்சிபீடம் ஏறுமாயின், உள்வீட்டு மோதல்கள் குறைவு. பதவி ஆசையின் நிமித்தம் பலரும் முரண்பட்டுக்கொள்வர். கடந்த காலங்களில் அவ்வாறு இடம்பெற்றிருக்கின்றன.

பல பங்காளிகளுடன் கூட்டணி ஆட்சியொன்று அமையப்பெறுமாயின் ஒவ்வொன்றுக்கும் பதில்கூற வேண்டி இருக்கும். கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்வது சிரமமாகும். இது, எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஆட்சி கவிழ்ப்புக்கு வித்திடலாம்.

அதனால்தான், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, “என்னிடம் பைல்கள் இருக்கின்றன” என அவ்வப்போது பயமுறுத்தி வந்தார். அதேபோல, “வாளை எடுப்பதற்கு நான் ஒருபோதும் தயங்கமாட்டேன்” என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அச்சுறுத்தி வந்தார்.

இந்தப் பயமுறுத்தல், அச்சுறுத்தல் எல்லாமே அடுத்த பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் வரையில்தான்! அதற்குப் பின்னர், எல்லாமே புஷ்வாணமாகிவிடும்.

ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இவ்வாறு பூச்சாண்டி காட்டும் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. அரசாங்கத்தை விமர்சித்த சுசில் பிரேமஜயந்தவை, இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து அதிரடியாகத் தூக்கிவீசி, தன்னுடைய அதிகாரத்தைக் காண்பித்தார்.

இந்நிலையில்தான், ‘முழுநாடும் சரியான பாதையில்’ எனும் தொனிப்பொருளின் கீழ், அரசாங்கத்தின் பங்காளிகளாக இருக்கும் 11 கட்சிகள் ஒன்றிணைந்து, நேற்று முன்தினம் (02) கூட்டமொன்றை நடத்தி, வேலைத்திட்டங்களையும் அறிமுகம் செய்திருந்தது. அதில் உரையாற்றிய பங்காளி கட்சிகளின் தலைவர்கள், அரசாங்கத்தின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்தனர்.

இங்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிறைவேற்று அதிகாரத்தை கையிலெடுத்து இருவரைத் தூக்கிவீசியுள்ளார். நாடு இன்று, பெரும் சிக்கல்களுக்குள் தவித்துக்கொண்டிருக்கையில் விமர்சனங்கள் எப்போதும் நல்வழிப்படுத்துபவையாகும்.

சுசில் பிரேமஜயந்த, ஓர் இராஜாங்க அமைச்சர்; அவரால் அமைச்சரவைக்குள் சென்று விமர்சிக்க முடியாது. ஆனால், ஆளும் கட்சியின் பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் விமர்சித்திருக்கலாம். எனினும், பொதுவெளியில் விமர்சித்தார் எனும் குற்றச்சாட்டின் கீழ், பதவியிலிருந்து தூக்கப்பட்டார்.

‘முழுநாடும் சரியான பாதையில்’ உரையாற்றிய அமைச்சர்களான விமல், கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு விமர்சனம் செய்வதற்கு மேலே குறிப்பிட்ட இரண்டு தளங்களும் உள்ளன. ஆனால், உள்வீட்டு விவகாரம் பொதுவெளியில் பகிரங்கமாக விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இத்தருணத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது அதிகாரத்தை பயன்படுத்தி இருவரின் பதவிகளை பறித்தார்.

உள்வீட்டு விவகாரத்தை அம்பலத்துக்கு கொண்டுவந்தது தவறாகும். ஆனால், உள்ளே விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லையெனில், அதற்கான பாதையை தேடிக்கொள்வதில் தவறில்லை. சுயவிமர்சனம் முக்கியம், விமர்சனங்களுக்கு செவிசாய்க்க வேண்டும். அடுத்தடுத்த கட்டங்களுக்கு காலமே பதில்சொல்லும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

அழகு எதுவெனப் பலர் அறிந்து கொள்வதில்லை. அதனாலே உண்மையான அழகைவிட, போலியான வடிவங்களை இரசித்தபடி வாழ்கின்றார்கள். ஆயினும், நெஞ்சத்தைத் தொடும் படைப்புகளும் உருவாக்கப்படுகின்றன.

புறஅழகை இரசிப்பவர்கள், அகஅழகை மெருகூட்ட முயல்வதில்லை. நல்ல பேச்சு, வளம்மிகு கருத்து, எளிமையான தோற்றம், இயற்கையின் படைப்புகள் எனப் பல விடயங்கள் அழகுக்குள் இணைந்துள்ளன.

உருவங்கள் மட்டும் அழகல்ல; உணர்வுடன் சங்கமிக்கும் போதனைகள், இசைவடிவங்களும் ஒருவர் நெஞ்சத்தை அழகாக்கும்.

செயற்கையான முறையில் கற்பனை வடிவங்கள் உருவாக்கப்படுகின்றன. மனிதனின் ஆழ்மனதினூடாகப் புதுப்புது படைப்புகள் உருவாகுவது உண்டு.

சிருஷ்டிப்பு இயற்கையாக அமைவதைப் பார்க்கும்போது பிரமித்துவிடுகின்றோம். இன்று விஞ்ஞான வளர்ச்சி உயர்ந்திருப்பதால், செயற்கைக் காட்சிகள், வர்ணஜாலங்கள் நம்பமுடியாதபடி அமைந்துவிடுகின்றன.

கட்டடங்கள், அணைக்கட்டுகள், பாரிய கண்டுபிடிப்புகளின் தோற்றங்கள் என உலகம் பெற்ற வரவுகளும் அழகானவைதான். இவற்றின் அழகையும் போற்றுக!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஸ்ரீ லங்கா முதல் சிங்கலே வரை – 09

# மலையக மக்களை வஞ்சித்த தமிழ்த் தேசியம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

மலையக மக்களைத் தனித்த தேசிய இனமாக அங்கிகரிப்பதில், தமிழ்த் தேசியமும் சிங்களத் தேசியமும் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல என்பதை, சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் வரலாறு, தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

‘மலையகத் தமிழர்’ என அடையாளப்படுத்தப்படும் மக்களின் இலங்கை வருகை, இலங்கையையும் இந்தியாவையும் ஒருசேர ஆண்ட பிரித்தானியக் கொலனியாதிக்கத்தின் விளைவிலானது. இலங்கையில் போக்குவரத்துத் துறையை விருத்தி செய்யும் விருப்பத்துக்கு, போதிய ஆட்பலம் இலங்கையில் இருக்கவில்லை. இதனால், தென்னிந்தியாவிலிருந்து ஆட்களைக் கொண்டுவருவதற்கு பிரித்தானியர் முடிவெடுத்தனர். வீதி அபிவிருத்தி, ரயில் பாதை அமைப்பு, கொழும்பு துறைமுகம் ஆகிய போக்குவரத்துக்கு அடிப்படையான அம்சங்களை உருவாக்கி, வினைத்திறனுள்ளதாக மாற்றுவதற்காக அந்த மக்கள் அழைத்துவரப்பட்டார்கள்.

இவ்வாறு வந்தவர்கள், நிலமற்ற விவசாயிகளும் கூலி உழைப்பாளர்களுமாகவே இருந்தார்கள். இலங்கையில் அவர்கள் எதிர்நோக்கிய சொல்லொணாத் துயரங்களால், திரும்பவும் பலர் இந்தியாவுக்கு மீண்டனர். இதனால் பிரித்தானியர், கங்காணி முறையை அறிமுகப்படுத்தி அவர்களைத் தக்கவைத்தனர்.

மிகுந்த கட்டுப்பாடுகளுக்குள் பெருந்தோட்டங்களுக்குள் அடைபட்ட மக்களுக்கான மருத்துவம், கல்வி போன்ற வசதிகள் கிடைக்க, மிக நீண்டகாலம் எடுத்தது. மலைக்காடுகளில் உருவாகிய தோட்டங்களிலேயே இம்மக்கள் குடியமர்த்தப்பட்டார்கள். அயலில் வாழ்ந்த சிங்கள மக்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு, இவர்களுக்கு மறுக்கப்பட்டது. அதேவேளை, இரண்டு சமூகங்களுக்கு இடையிலான இனப்பகையும் திட்டமிட்டு வளர்க்கப்பட்டது.

மலையகத் தமிழருக்கு எதிரான இனவாத அரசியல், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தொடங்கியது. மலையகத் தமிழர், இலங்கைக்கு வந்து நூற்றாண்டு கடந்திருந்த நிலையில், அம்மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றி, எந்தவொரு சிங்களம், தமிழ் மொழி பேசும் அரசியல் தலைவரும் வாய்திறக்கவில்லை. எல்லோரும் அவர்களை, மலிவான கூலி உழைப்பாளர்களாகவே பார்த்தனர்.

இவர்களில் இருந்து வேறுபட்டிருந்தவர் பொன்னம்பலம் அருணாச்சலம் ஆவார். ஏனைய யாழ்ப்பாண உயர்சைவ வேளாள அரசியல் தலைவர்களில் இருந்து வேறுபட்டு, மலையகத் தமிழரது உரிமைகளுக்காகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்த ஒருவராக, தனித்துவமானவராகத் திகழ்ந்தார். அவரது சமூகக் நீதிக் கருத்துகள், அவரது சூழலை மீறியனவாக இருந்தன. இருந்தபோதும் அவரது முன்னோடியான செயற்பாடுகள், பின்வந்தவர்களுக்கு நம்பிக்கையளித்தன.

மலையகத் தொழிலாளர்களின் உரிமைகளுக்குக் குரல்கொடுக்க, மலையகத் தமிழர் எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட உயர்குடியினர் முன்வரவில்லை. அதேவேளை, மலையகத் தலைவர்கள் என்று தம்மை அழைத்தோர் தொடர்ந்தும் தம்மை ‘இந்திய வம்சாவளியினர்’ என்று அழைத்தனர். அவர்கள் நேருவையும் காந்தியையுமே தம் தலைவர்களாக வரித்துக் கொண்டனர்.

இதனாலேயே 1939இல் உருவாகிய அமைப்பு ‘இலங்கை-இந்திய காங்கிரஸ்’ என்று பெயரிடப்பட்டது. இந்திய அடையாளத்தை முன்னிறுத்தியதன் மோசமான விளைவை, 1948இல் கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டம் வெளிப்படுத்தி நின்றது. எந்த இந்திய அடையாளத்தை இவர்கள் முன்னிறுத்தினார்களோ, அதே அடையாளமே இவர்களது குடியுரிமைப் பறிப்புக்குக் காரணமானது. இதன் விளைவாலேயே, இலங்கை-இந்திய காங்கிரஸ், 1950இல் ‘இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்’ எனப் பெயர் மாற்றம் கண்டது.

சுதந்திர இலங்கையில், முதலாவது ஜனநாயக மறுப்பு பிரஜாவுரிமைச் சட்டமாகும். இந்தியத் தமிழர் எனவும் இந்திய முஸ்லிம்கள் எனவும் அன்று அறியப்பட்ட இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. இதில் ஜி.ஜி. பொன்னம்பலம் உள்ளிட்ட சில தமிழ்த் தலைவர்களின் பங்களிப்பு பெரியது. இதேவேளை, இன்று மலையகத் தமிழர்களுக்கு நடந்தது, நாளை ஈழத் தமிழர்களுக்கு நடக்கும் என்ற எண்ணம் சில தமிழ்த் தலைவர்களுக்கு இருந்தது என்பதையும் இங்கு அடிக்கோடிட வேண்டும்.

ஆனால், உரிமையிழந்த மலையகத் தமிழரின் உரிமைக்கான வலுவான குரல்கள், இலங்கையின் வடக்கு, கிழக்கில் இருந்து எழவில்லை. மலையகத் தமிழர்கள், ‘வெளியார்’ என்ற மனநிலை, ஈழத்தமிழரிடம் அப்போது இருந்தது. அவர்களை ஓர் இனக்குழுவாகவோ, மக்கள் கூட்டமாகவோ அங்கிகரிக்க தமிழ்த் தேசியம் தயாராக இருக்கவில்லை.

மலையகத் தமிழரை, தமிழ்த் தேசியம் எவ்வாறு நடத்தியது என்பதை, 1970களில் தங்கள் நிலங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட நிலையில், வடபகுதிக்கு வந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களை, அங்கிருந்த தமிழர்கள் எவ்வாறு நடத்தினார்கள் என்பதில் இருந்து புரிந்து கொள்ளவியலும்.

1970களில், மலையகத்தில் தோட்டங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட திட்டமிட்ட வன்முறையால், அங்கிருந்து இடம்பெயர்ந்து வடக்கில் கிளிநொச்சி, வவுனியா போன்ற பகுதிகளில் அதிகரித்திருந்த விவசாய அபிவிருத்தியை நம்பி, தொழிலாளர்கள் தோட்டங்களிலிருந்து வடக்கே புலம்பெயர்ந்தனர். அவர்களை ஏற்று, குடியேற்றிக் கண்ணியமான வாழ்க்கையை வழங்கியதில் சில தமிழ்த் தேசியவாதிகளின் பங்கு முக்கியமானது. குறிப்பாக, ‘காந்தியம் அமைப்பு’ இதனை முழுமூச்சாக மேற்கொண்டது.

ஆனால், அதைத் தாண்டி இம்மக்களின் மலிவான கூலி உழைப்பே, எல்லோருடைய கவனமுமாக இருந்தது. விவசாயத்தால் புதிய செல்வந்தவராகி இருந்தவர்களுக்கும் நிலவுடமையாளர்களுக்கும் மலையகத் தொழிலாளர்களின் வருகை வாய்ப்பாகியது. மலையகத் தமிழர்கள் தொடர்ந்தும் மலிவான கூலி உழைப்பாளர்களாகவே இருந்தார்கள்.

அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டன. அவர்களை, ‘கள்ளத்தோணிகள்’ என்று இழிவாக அழைத்தனர். அவர்கள், தங்கள் நியாயமான சம்பளத்தைக் கேட்டபோதெல்லாம், “பொலிஸிடம் பிடித்துக் கொடுக்கப்படும்” என்று அச்சுறுத்தப்பட்டனர். இவ்வாறு மலையகத் தொழிலாளர்கள், தொடர்ந்தும் நிலமற்றவர்களாக, உரிமை மறுக்கப்பட்டவர்களாக வாழ்ந்தார்கள்.

தமிழ்த் தேசியவாதத் தலைமைகள், அவர்களது உரிமைகள் குறித்தோ, அவர்களை ஒன்றிணைப்பது குறித்தோ சிந்தித்ததில்லை. தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டமாகவே, வடபுலத்தில் குடியேறிய மலையகத் தமிழர்கள் வாழ்ந்தார்கள். தமிழ் மொழி பேசுகிற இன்னோர் இனக்குழுவை, சிங்களத் தேசியவாதம் ஒடுக்கியது போலவே தமிழ்த் தேசியவாதமும் ஒடுக்கியது.

பிரஜாவுரிமைச் சட்டத்தின் போது, தமிழ்க் காங்கிரஸ் மலையகத் தமிழருக்கு துரோகம் இழைத்ததைத் தொடர்ந்து, தமிழரசுக் கட்சியும் யாழ். உயர்குடிகளின் தேவைக்கான கட்சியானது.

பெயரளவில் தமிழ் மக்களின் கட்சி என்று பேசியபோதும், மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை, அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வந்த மலையகத் தமிழரின் உரிமைகளை, தமிழ்த் தேசியவாதம் கவனத்தில் கொள்ளவில்லை.

1970களில் முனைப்படைந்த சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்கள், மலையகத் தமிழரினதும் ஈழத்தமிழரினதும் உரிமைகளுக்கான இணைந்த போராட்டங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திய போதும், தமிழ்த் தேசியவாதத்தின் பிற்போக்குத்தனமும் சுயநலமும் அவ்வாறானதொரு போராட்டத்தை முன்னெடுக்க இடமளிக்கவில்லை. தமிழ்த் தேசியவாதத்தின் இக்குறுந்தேசியவாதத்தை, அதன் வாரிசுகளான ‘இயங்கங்கள்’ வரித்துக் கொண்டன.

சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறை, பெருந்தேசியவாத அகங்காரமாக வெளிப்பட்டு நின்ற நிலையில், தமிழ்த் தேசியவாதத்தின் இயலாமையும் அரசியல் வங்குரோத்தும் பட்டவர்த்தனமாக வெளிப்பட்டது. இந்நிலையில் தமிழ்த் தேசியவாதிகள் எல்லோரும், தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒரே குரலில் பேசவேண்டும் என்று கோரினர்.

தமிழ் பேசும் எல்லா மக்களினதும் நலன்களைக் கருத்தில் கொள்ளாத, அம்மக்களின் உரிமைகளுக்காக என்றுமே குரல்கொடுக்காத ஒரு குழுவினரின் கோரிக்கை, காலத்துக்கு ஒவ்வாத ஒன்றாகவே பார்க்கப்பட்டது.

இன்றைய நிலையில், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை வெறுமனே சிங்களம், தமிழ் ஆகிய தேசிய இனங்களின் பிரச்சினையாக நோக்குவது கோளாறானது. தொடர்ச்சியான பெரிய நிலப்பரப்பொன்றுக்கு உரிமை கோரக் கூடிய சிங்கள, தமிழ்த் தேசிய இனங்கள் மட்டுமன்றி, தமக்கான தொடர்ச்சியான பெருநிலப்பரப்பற்ற போதும் மொழி, பண்பாட்டு, அரசியல், வரலாற்றுப் பொதுமைகளையுடைய முஸ்லிம், மலையகத் தமிழ் தேசிய இனங்களினதும் சுயநிர்ணயமும் சுயாட்சியும் என்ற அடிப்படையில் மட்டுமே, தேசிய இனப்பிரச்சினைக்கு, நிலைக்கக் கூடிய நல்ல தீர்வொன்றைக் காண இயலும். இதை ஏற்கத் தேசியவாதிகள் தயாராக இருக்கிறார்களா என்பது, பதிலை வேண்டி நிற்கும் கேள்வியாகும்.

தமிழருடனும் முஸ்லிம்களுடனும் ஒரே மொழியைப் பகிர்ந்து கொண்டுள்ள போதிலும், தனித்துவமானதும் சோகம் மிக்கதுமான வரலாற்றுப் பின்னணி மலையகத் தமிழர்களுடையது. கடந்த அரைநூற்றாண்டு காலத்தில், அவர்கள் ஒரு தனித்த தேசிய இனமாக வளர்ச்சியடைந்து உள்ளனர். தமிழர் என்ற பொது அடையாளத்துக்குள் எல்லோரையும் திணிப்பதும், மற்றச் சிறுபான்மையினரை விட நாமே அதிகம் பாதிக்கப்பட்டோம் என்பதனூடும் அவர்களது உரிமை மறுப்பைக் கவனிக்கத் தவறுவதும் தமிழ்த் தேசியவாத வரலாற்றின் மிகப்பெரிய பலவீனம். இதற்குத் தமிழ் மக்கள் கொடுத்த விலை அதிகம்.

## கடிதங்கள்

### தொடர்சியாக சிவப்பு சமிக்ஞை:

# அச்சத்துடன் பயணிகள்

வவுனியா, தாண்டிக்குளம் சந்தியில் அமைந்துள்ள ரயில் கடவையில் பொருத்தப்பட்டுள்ள ஒளி சமிக்ஞை நேற்று முன்தினம் (02) முதல் தொடர்ந்து இயங்கி கொண்டிருப்பதால், அவ் வீதி வழியாகப் பயணம் செய்யும் பொதுமக்கள், அச்சத்துடன் பயணத்தை தொடர்கின்றனர்.

இந்தக் கடவையில் உள்ள சிவப்பு விளக்கு தொடர்ச்சியாக ஒளிர்ந்தபடி உள்ளதால், ரயில் கடவையூடாக வேலைவிட்டு செல்வோர், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும், ரயில் வருவதாக எண்ணி நீண்ட நேரம் காத்திருந்த பின்னரே, சமிக்ஞை பழுதடைந்துள்ளது என்று, தமது பயணத்தைத் தொடர்கின்றனர்.

குறித்த கடவையில், இவ்வாறான கோளாறு முன்பும் ஏற்பட்டு சீர்செய்யப்பட்டிருந்தது. அதிக மக்கள் பயன்படுத்தும் இந்த ரயில் கடவையில், இவ்வாறான கோளாறுகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றதென குற்றம்சாட்டுவதுடன், இப்பழுதை நிரந்தரமாகச் சீர்செய்ய வேண்டும் எனவும் இந்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

அத்துடன், இந்த ரயில்வே கடவைக்கு மிக அண்மையில், பாடசாலை அமைந்துள்ளதுடன் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள், இக்கடவையின் ஊடாகவே செல்கின்றமையும், விரைவாக அக்கறை எடுத்து முன்னுரிமை வழங்கப்பட்டு, சீர்செய்யப்பட வேண்டிய பழுதாக இது உள்ளது.

க. அகரன்

புதுடெல்லி:

# உக்ரேனில் பணயக் கைதிகளாக இந்திய மாணவர்கள்?

## இந்தியர்களை மீட்க 'ஒப்பரேசன் கங்கா'

ரஷ்ய படையெடுப்பு காரணமாக உக்ரேனில் இருந்து இந்தியர்கள் வெளியேறி வரும் நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தரப்பில் அண்மையில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

குறித்த அறிக்கையில், 'இந்திய மாணவர்களை உக்ரேன் இராணுவம் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளது. அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி, ரஷ்ய எல்லைக்குச் செல்ல விடாமல் உக்ரேன் இராணுவம் தடுக்கிறது. உக்ரேனில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை எடுப்போம். இந்திய மாணவர்களின் பாதுகாப்பில் முழு ஒத்துழைப்பு வழங்குவோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் அரிந்தம் பக்சி, "உக்ரேனில் இந்திய மாணவர்கள் யாரும் பணயக் கைதிகளாகப் பிடித்துவைக்கப்படவில்லை. உக்ரேன் அதிகாரிகள் ஒத்துழைப்புடன் கார்கில் நகரில் இருந்து பெரும்பாலான இந்திய மாணவர்கள் மீட்கப்பட்டனர்.

உக்ரேனில் உள்ள இந்திய மாணவர்களுடன் தூதரகம் தொடர்ந்து தொடர்பில் உள்ளது. இந்திய மாணவர்களை உக்ரேனின் மேற்கு பகுதிக்கு அழைத்துச் செல்ல சிறப்பு ரயில்களை



இயக்கக் கோரியுள்ளோம். கடந்த சில நாள்களாக ஏராளமான இந்தியர்கள் உக்ரேனில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர். ஏராளமான இந்தியர்கள் விரைவாக மீட்கப்பட்டதை சாத்தியமாக்கிய உக்ரேன் அதிகாரிகளுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

### ரஷ்யாவிலிருந்து வெளியேறும் இந்திய மாணவர்கள்

உக்ரேனில் சிக்கியுள்ள இந்திய மாணவர்கள் முழுமையாக மீட்கப்படாத சூழலில், ரஷ்யாவில் உள இந்திய மாணவர்கள் பலரும் வெளியேறி வருகின்றனர். ரஷ்ய விமானங்களுக்கு, பல்வேறு நாடுகளும் தங்களின் வான் எல்லையை மூடியுள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாணவர்கள் கிளம்பிவருகின்றனர்.

ரஷ்யா தொடுத்த போரால், உக்ரேனில் சிக்கிய இந்திய மாணவர்களைப் பாதுகாக்கும் முகமாக 'ஒப்ரேஷன் கங்கா' என்ற மீட்புப் பணியில், தற்போது போர் விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அழைத்துவரப்படும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், விமான நிலையத்தில் இருந்து நேரடியாக புதுடெல்லியில் இருக்கும் தமிழ்நாடு அரசு இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு உபசரிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் போர் நடைபெற்ற தலைநகர் கீவ், இரண்டாவது பெரிய நகரமான கார்கிவ் ஆகியவற்றின் தேசிய மருத்துவப் பல்கலைகழகங்களில் பயில்பவர்கள்.

இவர்கள், அந்த இரண்டு நகரங்களிலும் பங்கர் எனப்படும் பாதாள அறைகளில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தங்கியிருந்து உயிரைப்பாதுகாத்து வந்தனர்.

கீவ் தலைநகரின் பங்கரிலிருந்து தப்பிய கோயம்புத்தூர் மாணவி கூறும்போது, "பங்கர்களில் எங்களுக்கு முறையான உதவிகள் கிடைக்கவில்லை. போர் துவங்கிய முதல்நாளான பெப்ரவரி 24க்கும் முன்பாகவே நாம் பங்கர்களுக்குள் செல்ல வேண்டியதாயிற்று. இங்கிருந்து நாம் தாய் நாடு திரும்புவோமா, இல்லையா? என்ற அச்சம் ஏற்பட்டுவிட்டது. இன்னும் கூட நாம் இந்தியா வந்து விட்டோம் என நம்மால் முழுமையாக உணரவில்லை. எங்களை போல், இன்னும் பல தமிழர் உட்பட இந்திய மாணவர்கள் பலரும் கீவ் நகரின் பங்கர்களில் சிக்கி வெளியேற முடியாமல் உள்ளனர்" எனத் தெரிவித்தார்.

புதுடெல்லி

# பெண் குழந்தை பிறந்தால் சலுகை



இந்திய அரசு, 2010ஆம் ஆண்டுமுதல் 'பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா 'என்ற திட்டத்தை செயற்படுத்தி வருகிறது.

இத் திட்டத்தின் கீழ் கர்பிணிகளுக்குப் பிரசவ உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 19 வயது அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள் தங்கள் முதல் பிரசவத்துக்கு இத்திட்டத்தின் கீழ் 5,000 ரூபாய் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிலையில், இத்திட்டத்தில் மேலுமொரு சலுகையாக இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்தால், அத்தாய்மார்களுக்கு 5,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என இந்திய அரசு அறிவித்துள்ளது. இச்சலுகை வருகின்ற ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமலுக்கு வரவுள்ளது.

சென்னை

# இரண்டு மாதங்களில் 56 பொலிஸார் உயிரிழப்பு



தமிழகத்தில் கடந்த இரண்டு மாதங்களில் 56 பொலிஸார் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக பொலிஸ் துறையில், சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பணியில் உள்ளனர். எனினும் மன அழுத்தம், தூக்கமின்மை, வேலைப் பளு, விடுமுறை மறுப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பொலிஸாருக்கு எளிதில் உடல் நலக்குறைவு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

அந்தவகையில், 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து பெப்ரவரி மாதம் வரை 56 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். இவர்களில், இருவர் கொரோனா மற்றும் புற்றுநோயாலும், ஒன்பது பேர் மாரடைப்பாலும், 10 பேர் தற்கொலை செய்தும், 12 பேர் விபத்தில் சிக்கியும், 23 பேர் உடல் நலக் குறைவாலும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

# சோபியாவுக்கு இரண்டு இலட்சம் நஷ்டஈடு





மாணவி சோபியா கைது செய்யப்பட்ட விவகாரத்தில் அவரது தந்தைக்கு ' 2 லட்ச ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்' என தமிழ்நாடு அரசுக்கு மாநில மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவராக இருந்த தமிழிசை சௌந்தரராஜன் பயணித்த தூத்துக்குடி விமானத்தில் லூயிஸ் சோபியா என்ற , மாணவி தனது பெற்றோருடன் பயணித்துள்ளார்.

அப்போது, குறித்த "மாணவி பா.ஜ.க ஆட்சி ஒழிக" என கோஷம் எழுப்பியதால் விமானத்திலும் விமான நிலையத்திலும் இரு தரப்புக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சோபியா, பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில், பொய் வாக்கு மூலம் தயாரித்து, சோபியாவை மன உளைச்சலுக்கு ஆளாக்கிய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென சோபியாவின் தந்தை ஏ.ஏ.சாமி, மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் புகார் அளித்திருந்தார்.

குறித்த புகாரானது, நேற்றைய தினம் (03) விசாரணைக்கு வந்த நிலையில், சோபியா மீதான குற்றச்சாட்டுகள் குறித்து, குற்றவியல் நீதிமன்றம் தான் தீர்மானிக்க வேண்டுமெனவும் அவர் கைது செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் மாநில மனித உரிமைகள் ஆணையகத்தின் உறுப்பினரான நீதிபதி துரை ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

மேலும், பாதிக்கப்பட்ட சோபியாவுக்காக அவரது தந்தை ஏ.ஏ.சாமிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டார்.

கோவை

# காரை விட்டு இறங்கி கதறி அழுத காதல் ஜோடி



நடுவீதியில், திடீரென காரில் இருந்து இறங்கிய இளம் தம்பதி, தங்களைக் காப்பாற்றும்படி கதறி அழுத சம்பவம் கோவையில் இடம்பெற்றுள்ளது.

கோவை-அவினாசி பிரதான வீதியில், நேற்று முன்தினம் இரவு (02) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த வீதியில் வாகன நெரிசலில் காத்திருந்த காரொன்றிலிருந்து, திடீரெனக் கதவுகளைத் திறந்து வெளியே ஓடிய இளம் தம்பதி, வீதியில் அமர்ந்து கொண்டு "எங்களைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்... " எனக் கதறி அழுதார்கள்.

இதனையடுத்து, அங்கு வந்த போக்குவரத்து பொலிஸார் விசாரணை செய்துள்ளனர். இதன்போது தெரியவருவதாவது, குறித்த தம்பதி, அவர்களது பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி, திருமணம் செய்திருந்தார்கள். இதனால், தம்மைச் சேர்த்து வைப்பதாக கூறி, பெண்ணின் தந்தை காரில் அழைத்துச் சென்றதாகவும், தாம் தேனிக்குக் கடத்திச் செல்லப்படுவதை உணர்ந்ததாகவும் இதனால் எங்களைப் பிரித்துவிடுவார்கள் என்ற பயத்தில், சிக்னலில் கார் நின்றதும் தப்பிக்க முயன்றதாவும் கண்ணீர் மல்கத் தெரிவித்தனர்.

இதையடுத்து, இளம் தம்பதியின் பெற்றோரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்த பொலிஸார், அவர்களைச் சமரசம் செய்தனர்.

திருநெல்வேலி

தி.மு.க "மண்டையை உடைப்போம்" என அச்சுறுத்தல்:

# ஹெல்மெட் அணிந்து பதவியேற்பு



தமிழகத்தில் நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்ற கவுன்சிலர்களின் பதவியேற்பு விழா நேற்று முன்தினம் (02) நடைபெற்றது.

இதன்போது குறித்த பதவியேற்பு விழாவுக்கு அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க), பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) ஆகிய கட்சிகளைச் சேர்ந்த ஒன்பது கவுன்சிலர்கள் ஹெல்மெட் அணிந்து கொண்டு வருகை தந்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக கூறுகையில், "திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர்கள் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளும் அ.தி.மு.கவினரின் மண்டையை உடைப்போம் என்று கூறியதாலேயே பாதுகாப்பு க் கருதி இவ்வாறு ஹெல்மெட் அணிந்து வந்துள்ளோம் " என்றார்.

இந்நிலையில் இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சேதன உரப் பயன்பாடு முயற்சிகளுக்கு பவர் ஆதரவு

பாரம்பரிய முறைமையிலிருந்து சேதன விவசாய முறைக்கு வெற்றிகரமாக மாறிக் கொள்வதற்கு விஞ்ஞான ரீதியாக மற்றும் பிரயோக ரீதியாக தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் தொடர்ச்சியான முயற்சிகளின் மற்றுமோர் அங்கமாக, ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தால், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சேதன விவசாய நிபுணர்கள் அணியினரை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வந்திருந்தது. ஏற்கெனவே இந்த நிபுணர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த நிலையில், பெப்ரவரி மாதத்தின் முற்பகுதியில் இவர்களை மீண்டும் அழைத்துவருவதற்கான நடவடிக்கைகளை பவர் மேற்கொண்டிருந்தது.

இந்த அணியில் School of Agricultural, Forest and Food Sciences (HAFL)இன் இயற்கை வளங்கள் முகாமைத்துவ பேராசிரியர். கிறிஸ்டோஃப் ஸ்டுடர், Plant Pathology and Soil Quality தொடர்பான சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி ஜாக்ஸ் ஜி ஃபுக்ஸ் மற்றும் Research Institute of Organic Agriculture (FiBL) இன் சிரேஷ்ட ஆலோசகர் போல் வன் டென் பேர்க் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இந்த இரண்டாம் கட்ட விஜயத்தின் போது, கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 10 நாள்கள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போது முன்னெடுத்திருந்த பரந்தளவு பங்காளர்களுடனான ஆரம்ப கட்ட சந்திப்புகளுடனான, ஆழமான பகுப்பாய்வுகள், மதிப்பீடுகளைத் தொடர்ந்து, பரிபூரண ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்ப கண்டறிதல்களின் பிரகாரம் தந்திரோபாய ரீதியில் இனங்காணப்பட்ட பகுதிகள் தொடர்பில் மேலும் ஆய்வுகளை முன்னெடுப்பது இம்முறை விஜயத்தின் நோக்கமாக அமைந்திருந்தது.

ஒன்பது நாள்கள் விஜயத்தின் போது, அரசாங்கத்தின் நிலைபேறான விவசாய கொள்கை தொடர்பான தற்போதைய நிலைப்பாடு பற்றி அறிந்து கொள்வதற்காக, விவசாய அமைச்சின் அதிகாரிகளுடன் இந்த நிபுணர்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்ததுடன், அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (RRDI), கள விளைச்சல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (FCRDI), பண்ணை பொறிமுறைப்படுத்தல் ஆய்வு நிலையம் (FMRC), பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் மஹாஇலுப்பள்ளமவில உள்ள உப கம்பஸ் வளாகம் மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் (TRI) ஆகியவற்றுக்கு விஜயம் செய்து அவற்றின் ஈடுபாடு மற்றும் எதிர்காலத்திட்டங்கள் பற்றி அறிந்து கொண்டது.

இதன் போது கள விளைச்சல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (FCRDI) அதிகாரிகள் மற்றும் கல்விமான்களுடன் கலந்துரையாடல்கள் இதில் அடங்கியிருந்தன. இரு பிரதான நெற் போகங்களுக்கிடையே மாற்றுப் பயிர்ச் செய்கை ஒன்றை மேற்கொள்ளக்கூடிய



வாய்ப்புகள் பற்றி கண்டறியும் வகையில் இந்த உரையாடல்கள் அமைந்திருந்தன. நுவரெலியா நகர சபைக்குட்பட்ட பகுதிகளுக்கு இந்த நிபுணர் குழு விஜயம் செய்து, வெளி நகரங்களில் காணப்படும் கழிவு முகாமைத்துவ செயன்முறை பற்றி கவனம் செலுத்தியிருந்தது. நுவரெலியா நகரில் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பின்பற்றப்படும் செயன்முறைகள் பற்றி தமது செயன்முறைகள் மற்றும் அனுபவங்கள் பற்றி மேயர் அடங்கலாக சபை அங்கத்தவர்கள் விளக்கமளித்திருந்தனர். தம்புளையிலுள்ள மாபெரும் மரக்கறி மற்றும் பழங்கள் மொத்த வியாபார நிலையத்துக்கும், முன்னணி பால் பண்ணைப் பகுதி, தனியார் கோழிப் பண்ணை, சிலாபத்திலுள்ள கொம்போஸ்ட் தயாரிப்புப் பகுதி போன்றவற்றுக்கும் அவர்கள் விஜயம் செய்து சேதன பயிர்ச் செய்கைக்கு தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வது பற்றி கவனம் செலுத்தியிருந்தனர்.

> **ஆரம்ப கண்டறிதல்களின் பிரகாரம் தந்திரோபாய ரீதியில் இனங்காணப்பட்ட பகுதிகள் தொடர்பில் மேலும் ஆய்வுகளை முன்னெடுப்பது இம்முறை விஜயத்தின் நோக்கமாக அமைந்திருந்தது**

FiBL மற்றும் HAFL உடன் பவர் கொண்டுள்ள பங்காண்மையின் அங்கமாக, Bern University of Applied Sciences இன் பட்டதாரியான ஜாக்ஸ் கோலி, பவர் நிறுவனத்தில் இடைக்கால பயிற்சி பெறுநராக பணியாற்றுகின்றார். இதன் போது, சேதன உரத் தயாரிப்புக்கு அவசியமான மூலப்பொருட்களின் கிடைப்பனவு மற்றும் அவற்றின் பயன்பாடுகள் பற்றிய விவரமான ஆய்வொன்றை மேற்கொள்கின்றார்.

இலங்கை நனோ தொழில்நுட்பவியல் கல்வியகம் (SLINTEC), தொழிற்றுறை தொழில்நுட்ப கல்வியகம் (ITI), உயிரியல் உர உற்பத்தியாளர் ஆகிய அதிகாரிகளுடனும் இவர்கள் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தனர். இதன் போது அரசாங்கத்தின் வழிகாட்டல் தொடர்பான அவர்களின் நிலைப்பாடு மற்றும் அவர்களுடன் கைகோர்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள், இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனம் (SLSI), தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை போன்ற கொள்கை வடிவமைப்பாளர்களுடன் கலந்துரையாடல்களும் இதில் அடங்கியிருந்தன.

# டோக்கியோ சீமெந்தின் சமூக மற்றும் நிலைபேறாண்மை தூதுவர் நியமனம்

டோக்கியோ சீமெந்து குழுமம் தனது சமூக மற்றும் நிலைபேறாண்மை தூதுவராக செல்வி சாடே கிரீன்வுட் ஐ நியமித்துள்ளது. இந்த நியமனத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஆர்.ஞானம், கிரீன்வுட்டுடன் பரிமாறிக் கொண்டார். இந்த கைகோர்ப்பினூடாக, டோக்கியோ சீமெந்தால் முன்னெடுக்கப்படும் பல்வேறு சமூக மற்றும் நிலைபேறாண்மை செயற்பாடுகள் தொடர்பான பொது விழிப்புணர்வு நடவடிக்கைகளை சாடே முன்னெடுக்கவுள்ளதுடன், சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டு பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கு திட்டமிட்டுள்ளார்.

Miss World 2021இல் இலங்கை சார்பாக போட்டியிடுவதற்கு செல்வி சாடே கிரீன்வுட் தெரிவாகியிருந்ததுடன், கடந்த டிசெம்பர் மாதம் போர்டோ ரிகோவில் இடம்பெற்ற சர்வதேச அழகு ராணித் தெரிவில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றிருந்தார். சிறந்த 40 போட்டியாளர்கள் வரிசையில் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், நடுவர்களின் சிறந்த 25 தெரிவுகளில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 40 ஆண்டு கால அழகு ராணிப் போட்டித் தெரிவில் இலங்கையர் ஒருவர் பெற்றுக் கொண்ட உயர்ந்த தரப்படுத்தல் இதுவாக அமைந்திருந்தது. தொற்றுப் பரவல் காரணமாக, 2021 உலக அழகு ராணி போட்டியின் வெற்றியாளருக்கு மகுடம் சூடும் நிகழ்வு இந்த ஆண்டு மார்ச் மாதம் போர்டோ ரிகோவில் இடம்பெறும்.

உலகில் நேர்த்தியான மாற்றத்தை



ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் செல்வி சாடே கிரீன்வுட், கடல் பாதுகாப்பு தொடர்பில் அதிகளவு ஆர்வம் கொண்டுள்ளதுடன், பல்வேறு நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளார். தமது ஈடுபாட்டினூடாக, எமது சமூகம் மற்றும் சூழலில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பரந்த விழிப்புணர்வு மற்றும் ஆதரவை செல்வி சாடே கிரீன்வுட் ஏற்படுத்தியுள்ளார்.

சகல இலங்கையர்களின் வாழ்விலும் நீடித்து நிலைத்திருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில், டோக்கியோ சீமெந்து குழுமத்தின் பல்வேறு நிலைபேறான நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகளில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பு என்பது, இந்தத் தாக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளினூடாக வலுவூட்டப்பட்டுள்ளதுடன், டோக்கியோ சீமெந்து நிறுவனம், சமூக நலன்புரிச் செயற்பாடுகள் மற்றும் சூழல் பாதுகாப்பு பணிகளை தனது கூட்டாண்மைச் செயற்பாடுகளிலும் உள்வாங்கி முன்னெடுக்கின்றது. அதனூடாக, நாட்டுக்கும், மக்களுக்கும் மற்றும் சூழலுக்கும் வளமூட்டும் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்கின்றது.

அமெரிக்கா

# இந்தியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை ?

**அமெரிக்கா பரிசிலனை**

இந்தியா மீது பொருளாதார தடை விதிக்கலாமா, வேண்டாமா? என்பது குறித்து அமெரிக்கா ஆலோசனை செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்திவரும் நிலையில், உக்ரேனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அமெரிக்கா, ரஷ்யா மீது பொருளாதார தடை விதித்தது.

மேலும், பொருளாதாரத் தடையை விதித்ததற்காக, ரஷ்யா சைபர் தாக்குதல் நடத்தினால் அதனை எதிர்கொள்ளத் தயாரான இருப்பதாகவும் குறிப்பாக அமெரிக்காவிலுள்ள ரஷ்யாவின் அனைத்து சொத்துகளும் முடக்கப்படும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்தியாவிற்கு எஸ்-400 ஏவுகணை தடுப்பு அமைப்பு, திட்டமிட்டபடி வழங்கப்படும் என ரஷ்யா நேற்று முன்தினம் (02) உறுதியளித்தது.

இதனால், இந்தியா மீது பொருளாதார தடை விதிக்கலாமா, வேண்டாமா? என அமெரிக்கா ஆலோசனை செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சீனாவின் குப்பைகளால் ஆபத்து



2014 இல் சீனா தனது சந்திர பயணத்தைத் தொடங்கியதிலிருந்து சுமார் 3 தொன் அளவிலான குப்பைகளை விண்வெளியில் கொட்டி வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், விண்வெளிக் குப்பைகள் ஏனைய செயற்கைக் கோள்களுக்கு இடையூறாக உள்ளன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், இக்குற்றச் சாட்டை சீனா மறுத்து வருகிறது.

இந்நிலையில் சீனாவின் விண்வெளிக் குப்பை இன்று (04) நிலவில் மோதவிருப்பதாகக் கூறப்படுகிறது. மணிக்கு 9 ஆயிரத்து 300 கிலோ மீற்றர் வேகத்தில் மோதும் இப்பொருளால் நிலவின் 10 முதல் 20 மீற்றர் அளவுக்குத் துளை ஏற்படும் வாய்ப்பு காணப்படுவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



உக்ரேன்

## அப்பாவிகளை கொன்று வருகிறோம்

**கதறி அழுத ரஷ்ய இராணுவத்தினர்**

நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்நாட்டின் மீது ரஷ்யா தொடர்ந்து 8ஆவது நாளாகத் தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேபோல் உக்ரேனும் தம்மைத் தற்காத்துக் கொள்ள, ரஷ்ய படைகள் மீது தாக்குதல் நடத்திவருகின்றது.

இந்த மோதலில் இரு நாடுகளிலும் அதிக அளவில் உயிரிழப்புகளும் பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், தாம் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று வருவதாக உக்ரேன் வீரர்களால் சிறைபிடிக்கப்பட்ட ரஷ்ய வீரர்கள், கதறி அழுத வண்ணம் வாக்குமூலம் வழங்கிய வீடியோவொன்று இணையத்தில் வைரலாகி வருகின்றது.

குறித்த வீடியோவில், "அமைதியாக வாழும் மக்கள் மீது, நாம் தாக்குதல் நடத்துகிறோம். ரஷ்ய பீரங்கிகளுக்கு அவர்கள் தீவனமாக மாறி விட்டார்கள். தாக்குதலில் உயிரிழந்த சக வீரர்களின் சடலங்களைக் கூட, நாங்கள் எடுப்பதில்லை" எனவும் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில், ஐ.நா சபையில் நேற்று முன்தினம் (03) 'உக்ரேனிலிருந்து ரஷ்யப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும்' என்ற தீர்மானத்திற்கான, வாக்கெடுப்பு நடைபெற்றது.

193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா சபையில், இத் தீர்மானத்துக்குச் சார்பாக 141 நாடுகளும் எதிராக ஐந்து நாடுகளும் வாக்களித்துள்ளன. எனினும் இலங்கை, இந்தியா உட்பட 35 நாடுகள், வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இதனையடுத்து, உக்ரேன் நாட்டிலிருந்து, ரஷ்ய படைகள் உடனே வெளியேற்றப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வத்திக்கான்

## அதிகமாகக் குழந்தை பெற்றுக் கொள்ளுங்கள்

**போப் ஆண்டவர் அறிவுரை**



"வத்திக்கானில் வாழும் தம்பதியினர், செல்லப் பிராணிகள் வளர்ப்பதை விட்டுவிட்டு, அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்" என போப் ஆண்டவர் பிரான்சிஸ் அறிவுறுத்தியுள்ளார்.

இத்தாலியில் இருக்கும் தன்னாட்சி பெற்ற நாடான வத்திக்கானில், மகப்பேறு விடுப்பு கொள்கை அண்மையில் மாற்றப்பட்டது.

அந்தவகையில் 'பெண்களுக்கு ஆறு மாதங்களாக இருந்த மகப்பேறு விடுப்பு, தற்போது 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளதோடு, ஆண்களுக்கு முழு ஊதியத்துடன் கூடிய மூன்று நாள்கள் மகப்பேறு விடுப்பும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், குழந்தையை தத்தெடுக்கும் பெற்றோர்களுக்கும் இச்சலுகை அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது இதுகுறித்து மேலும் தெரிவித்த போப் ஆண்டவர், "குழந்தைகளின் இடத்தை நாய்களும் பூனைகளும் பிடித்துள்ளன. வத்திகானில் வாழும் தம்பதியினர், செல்லப் பிராணிகளை வளர்ப்பதை விட்டுவிட்டு, நிறையக் குழந்தைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்" என்றார்.



உக்ரேன்

**போர்க்களத்தில் ஆயுதமேந்திய**

## புதுமணத் தம்பதி

ரஷ்யா, உக்ரேன் மீது கடந்த 24ஆம் திகதியிலிருந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனையடுத்து உக்ரேன் அரசு, மக்களுக்கு துப்பாக்கிகளை வழங்கி, பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், கடந்த வாரம் திருமணம் செய்த யாரினா அரிவா, ஸ்வியாடோஸ்லாவ் ஃபர்சின் என்ற இளம் தம்பதி, தங்கள் நாட்டைக் காக்க போராடி வருகிறனர்.

பாதுகாப்பு உடைகளுடன் துப்பாக்கியை கைகளில் ஏந்திக்கொண்டு, போர்க்களத்தில் நிற்பது குறித்து அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "நாங்கள் யாரும் தோற்றுப் போவோம் என்று கூறவில்லை; அழவில்லை. அனைத்து மக்களும் வெல்வோம் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம். இது அனைத்தும் காலத்தின் கேள்வி. மேலும், பெரும்பாலும் மக்கள் போராட தயார் நிலையில் இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. தங்கள் நாட்டிற்காக உயிர் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறோம். இப் போரில் நாங்கள் வெல்வோம் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. உலக சுதந்திரத்திற்காக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம் என்று ரஷ்ய மக்கள் உட்பட இந்த உலக மக்கள் நினைவில் வைக்க வேண்டும்" என்றனர்.

அமெரிக்கா

**அமெரிக்க இராணுவத்தில்**

## தமிழ் நடிகை



அமெரிக்க இராணுவத்தில் முதல் முறையாக தமிழ் நடிகையொருவர் இணைந்துள்ளமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

2021ஆம் ஆண்டு வெளிவந்த 'காதம்பரி' திரைப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் அகிலா நாராயணன்.

அமெரிக்காவில் வசித்துவரும் அவர், கலை மீது அதிக ஆர்வம் கொண்டவராக இருந்ததால், தனியாக முயற்சி செய்து தமிழ் திரையுலகில் நடிகையாக அறிமுகமானார்.

இந்நிலையில், அவருக்கு அமெரிக்க இராணுவத்திலும் இணைய வேண்டும் என ஆர்வம் காணப்பட்டதாகவும், அதற்காகப் பல மாதங்களாகக் கடுமையாகப் பயிற்சிகளை மேற்கொண்டு, வெற்றிகரமாக பட்டம் பெற்றுள்ளதாகவும், தற்போது அமெரிக்க இராணுவ வீரர்களின் சட்ட ஆலோசகர் பணியில் இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பிக்கின்றது:**

# இந்தியாவுக்கு சவாலளிக்குமா இலங்கை?




இலங்கை, இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது, மொஹாலியில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில் இலங்கை வெள்ளையடிக்கப்பட்டிருந்த நிலையில், இந்தியாவுக்கு டெஸ்ட் தொடரில் சவாலை அளிப்பதற்கு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.



> **டெஸ்ட் போட்டிகளில் திமுத் கருணாரத்ன, தனஞ்சய டி சில்வா, அஞ்சலோ மத்தியூஸ், பதும் நிஸங்க எனத் துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் சராசரியான அணியாகவே இலங்கை காணப்படுகின்றது**

எனினும், டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, தனஞ்சய டி சில்வா, அஞ்சலோ மத்தியூஸ், பதும் நிஸங்க எனத் துடுப்பாட்டத்திலும், லசித் எம்புல்தெனிய, பிரவீன் ஜெயவிக்கிரம, சுரங்க லக்மால் என பந்துவீச்சிலும் ஓரளவு சராசரியான அணியாகவே இலங்கை காணப்படுகின்றது.

மறுபக்கமாக இந்தியாவைப் பொறுத்த வரையில் செட்டேஸ்வர் புஜாரா, அஜின்கியா ரஹானே இல்லாமல் களமிறங்குகின்ற நிலையில் ஹனுமா விஹாரி, ஷுப்மன் கில்லின் பெறுபேறுகளே அணியில் அவர்களது இடத்தைத் தீர்மானிக்கும்.

**காத்தான்குடி கால்பந்தாட்ட லீக் தொடர்:**

## அடுத்த சுற்றில் ஏறாவூர் லக்கிஸ்டார்

■ அஸ்ஹர் இப்றாஹிம்



காத்தான்குடி கால்பந்தாட்ட லீக்கால் நடாத்தப்படும் 2022ஆம் ஆண்டுக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் டிவிசன் ஏ அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டியானது ஏறாவூர் லக்கிஸ்டார் விளையாட்டுக் கழகம் மற்றும் பாலமுனை நஷனல் விளையாட்டுக் கழகம் ஆகிய அணிக ளுக்கி டையில் பாலமுனை முகைதீன்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் லக்கிஸ்டார் விளையாட்டுக் கழகம் 3 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. லக்கிஸ்டார் சார்பாக, அக்கீல் 2, ஹிராஸ் ஒரு கோலைப் பெற்றனர்.

## புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட வெர்ஸ்டப்பன்




நடப்பு போர்மியுலா வண் உலக சம்பியனான றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன், அவ்வணியுடன் எதிர்வரும் 2028ஆம் ஆண்டு வரையில் நீடிக்கவுள்ளார் என அவ்வணி உறுதிப்படுத்தியுள்ளது.

புதிய ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்தே எதிர்வரும் 2028ஆம் ஆண்டு வரையில் றெட் புல் அணியில் வெர்ஸ்டப்பன் நீடிக்கவுள்ளார்.

ஐந்தாண்டு ஒப்பந்த நீடிப்பானது ஆண்டொன்றுக்கு 55 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் எனக் கூறப்படுகிறது. இது மேர்சிடீஸ் அணியில் லூயிஸ் ஹமில்டன் பெறுவதற்கு நிகரானது எனக் கூறப்படுகிறது.

ஏற்கெனவே உள்ள வெர்ஸ்டப்பனின் றெட் புல் ஒப்பந்தமானது அடுத்தாண்டு வரைக்கும் இருந்திருந்தது.

**இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின்**

## ஒப்பந்தங்களில் சஹா, ஷர்மா

இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் போட்டிகளுக்கான விக்கெட் காப்பாளர் ரித்திமான் சஹா, வேகப்பந்துவீச்சாளர் இஷாந்த் ஷர்மா ஆகியோருக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரினதும் இந்திய அணி எதிர்காலம் குறித்து சந்தேகம் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஹர்திக் பாண்டியா, ஷீகர் தவான் ஆகியோர் சி பிரிவிலேயே இடம்பெற்றுள்ளனர். தவிர, அஜின்கியா ரஹானே மற்றும் செட்டேஸ்வர் புஜாரா ஆகியோர் பிரிவு பியில் இடம்பெற்றுள்ளனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வெள்ளிக்கிழமை, 04 மார்ச் 2022, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.